www.padippakam.com

15-05-2005

# இலங்கை விகடன்

ඉලංගය් විකඩන්

ILLANKAI VIKADAN

விலை: ரூபா 25/-




- கமான் Boys...
- ரஜினி, வைரமுத்து கலக்குகிறார்கள்.
- A,B,C,D குணங்கள் & மணங்கள்.

பக்கத்திற்கு பக்கம் பரவசம்

படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்



## யதார்த்தம் உணர...

"இலங்கை சமாதான முயற்சிகளை ஆதரிப்பதாகவும் ஆனால் விடுதலைப்புலிகளின் மேலாதிக்கத்தை எதிர்ப்பதாகவும் இந்திய வெளியுறவு செயலாளர் சியாம் சரண், சமாதான தூதுவர் எரிக்சொல்ஹெய்மிடம் புதுடில்லியில் வைத்து தெரிவித்துள்ளார்.

"படைச்சமபல அந்தஸ்து" என்ற வார்த்தைப்பிரயோகத்தின் அடிப்படையிலேயே போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு சமாதானப்பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் இராணுவ ரீதியிலான வெற்றிகளே படைச்சமபல அந்தஸ்தைப்பெற்றுக்கொடுத்தன.

இலங்கை தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தின் வெற்றி விடுதலைப்புலிகளின் இராணுவ - அரசியல் பலத்திலேயே தங்கியுள்ளது என்பதை தற்போது வடக்கு கிழக்கு மக்கள் அரசியல் ரீதியாக அதன் தேவையை உணர்ந்துள்ளார்கள். உணர்த்தியும் வருகிறார்கள். தமது ஒன்றுபட்ட சக்தியை பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆணித்தரமாக உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தி வருகிறார்கள்.

சந்தைவெளி சம்பவத்தை கண்டித்து நடை பெற்ற ஹர்த்தாலின் வெற்றிக்கு காரணம் மக்களின் ஒருமித்த உணர்வுரீதியான வெளிப்பாடாகும். மாகாண மட்டத்தில் அரச தனியார் துறைகளை முழுமையாக ஸ்தம்பிதம் அடைய செய்த ஒரு ஹர்த்தாலை 24 மணி நேரத்தில் ஒழுங்குப்படுத்துவது சாத்தியமில்லை. இக்ஹர்த்தாலின் வெற்றிக்கு காரணம் மக்களின் அரசியல் விழிப்புணர்வாகும்.

தமிழரின் உயிர்வாழும் உரிமை கேள்விக்குறியாக்கப்படும் போது தமிழ் மக்கள் அரசியல் எழுச்சிகள் மூலம் தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவது இக்காலக்கட்டத்தின் முக்கிய தேவையாகும்.

இப்பத்திரிகை, இல. 160, தெலங்கபாத வீதி, வத்தளையில் உள்ள வரையறுக்கப்பட்ட றிப்போட்டஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் இல. 67/B, தெலங்கபாத வீதி, வத்தளையில் உள்ள ரூபின் இன்டஸ்ரீஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, மே மாதம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டது.
தொலைபேசி இலக்கம் - 011 4810054. E-mail: REPORTERS PUBLICATION @ YAHOO .COM

# கந்தகவடை

காக்கா - நரி வடை கதையை, கவிஞர் வைரமுத்து சொன்னால் எப்படி இருக்கும்? ஒரு தமாஷ் கற்பனை...

புழுதி படிந்த ஒரு கிராமத்தில் யௌவனக் கிழவி ஒருத்தி வடை சுட்டு விற்று வந்தாள். அந்த மோக வடைக்காகத் தாகம் கொண்டு வந்தது ஒரு கார்மேகக் காகம். "சில்லறை கொடுக்காமல் வடை கேட்டால் உன்னைக் கல்லறைக்கே அனுப்பி விடுவேன்" எனச்சினந்தாள் அந்தச் சிங்காரக் கிழவி. ஆனால். பாட்டி பாராத சமயம் அந்த அந்தகக் காகம் சந்தனமின்னல் - போல பாய்ந்து அந்த கந்தக வடையைக் கவர்ந்து சென்றது....

எங்கே சென்றது? அது ஒரு தாவணி மேகங்கள் சூழ்ந்த காடு, பொன்மாலைப்பொழுது, பச்சைப் புல்வெளி ஓரம், பன்னீர்க்குடங்களின் சாரம்!... அங்கே சென்றது காகம்!...

விதைக்குள் இருந்து வந்த விருட்சம், அங்கே வளர்ந்து நின்றது பல வருஷம்! அதன் கிளைகளில் சென்று அமர்ந்தது அந்த சொப்பனக் காகம்!...

அந்தக்கனவு வடையைத் தன் வீரிய விரல்களுக்கு இடையே வைத்து நேரிய நயனத்தால் சுற்றும்முற்றும் பார்த்து... கூரிய அலகால் கொத்திச் சாப்பிட முயன்றபோது...

பூவுக்குள் பூகம்பம் போல் புறப்பட்டு வந்தது ஒரு நரி! அந்த நரி நர்த்தக நரி! நாலடியார் நரி! நீதியறிந்து சேதி சொல்லும் போதிமரத்துச்சாதி! நர்த்தக நரி கார்மேகக் காகத்தைப் பார்த்தது... உடல் வியர்த்தது!... நரியின் மனத்தில் ஒரு வெறி வேர்விட்டது!... அந்த ராஜவடையை அபகரிக்க அதன் நந்தவனத்து மூளை நாசவேலை செய்தது!... நரி அதுவாக காகம் அருகே மெதுவாக... ஒரு இதுவாகச் சென்றது!...

"ஓ, உலக அழகியே!... உள்ளூர் மோனாலிஸாவே! கறுப்பு முந்திரியே! சுந்தர்வ சுந்தரியே! நீ பார்க்கவே எவ்வளவு அழகு! நீ மட்டும் கானம் இசைத்தால், எருதுக்கும் விருது கிடைக்கும்! சர்ப்பம் கூட கர்ப்பம்

நீ பார்க்கவே எவ்வளவு அழகு! நீ மட்டும் கானம் இசைத்தால், எருதுக்கும் விருது கிடைக்கும்! சர்ப்பம் கூட கர்ப்பம் தரிக்குமே!"



காக்கா - நரி வடை கதையை, கவிஞர் வைரமுத்து சொல்கிறார்.

தரிக்குமே!" என்றது! இந்த இடத்தில் தான் சரித்திரம் சரிகிறது, பூகோளம் புரள்கிறது! நரியின் தேவ எண்ணத்தில் ஈட்டி பாய்ந்தது!... கார்மேகக் காகம் நரியை வெறுத்தது. பாட்டை ஒறுத்தது. அது பதிலிறுத்தது....

"நான் வைரமுத்துவின் வாசலில் வளர்ந்த காகம்! மெட்டிருந்தால் தான் பாடுவேன்... இல்லையேல் இல்லை!" என்று சொல்லிப் பறந்தது.... நரியின் சூது இறந்தது!...

கதை முடிவில் பாரதிராஜாவின் குரலில் வைரமுத்துவின் வாச கங்கள்:

"ஓ, புழுதியின் புத்திரர்களே! இது ஒரு யுகப் புரட்சி! இன்னும் இருநூறு வருஷங்களுக்கு இந்த வாடகை வடை கதை வைரமுத்துவின் வாசலுக்கு விலாசம் சொல்லிக் கொண்டே இருக்கும்!... அங்கு ஆனந்தங்கள் பரவசம்! அனுமதி இலவசம்!" ■

www.padippakam.com




## "எருகலம்பிட்டியாள்"

அவளின் நெற்றியில் உறிஞ்சினாற்போல் முத்தத்தைக் கொடுத்தான் கணேஸ்!

"வகி"டின் விளிம்பில் முத்தமிடுமாறு காண்பித்தாள்!

"கண்ணில..." என்றாள்.

கண்களில் இதழைப்பதிக்கும்போது கண்ணை மூடிக்கொண்டாள். "இந்தக் கண்ணில..." என்றாள்.



படிப்பகம்

"கன்னத்தில..."

"ஸ்... அப்பா! என்னங்க கடிச்சே எடுத்துடுவீங்க போலிருக்கு"

"கடிச்சி எடுக்கறதா? அப்படியே தின்னுடுவேன்..."

"இந்தக் காதில..."

"ரொம்ப அழுத்தி கடிக்காதீங்க... கூசுது..."

"நீதான் சொல்ற, முத்தம் கொடுத்தா அழுத்திக் கொடுக்காதேன்னா அதுக்கப்புறம் எப்படி கொடுக்கறது?"

"நாய் வெளையாட்டுக்கு கௌவுமில்லை! அப்படி, பூனை குட்டியை நோவாம தூக்கிக்கிட்டு போவுமில்லை, அதுமாதிரி..."
"ஓகோ... அப்படியா சங்கதி..." என அவள் காதில் இதழால் நீவினான்!
"தலையில முடிஞ்சி போச்சா...?"
"பாக்கியிருக்கற எடத்த சொல்லுடா..."
"உச்சந்தலையைக் காண்பித்தாள்! "
"ஆமாம்... ஹ்ம்..." எனக்கொடுத்தான்!

"என்ன ஹ்ம்... ஹ்ம்...? முத்தத்துக்கான சத்தத்தோட கொடுங்க"

"மூக்கை ஒரு கடி கடிங்களேன்... மெதுவா..." என்றாள்!

"கிழிஞ்சிது போ..." எனச்சொல்லி மூக்கின்மேல் முத்தமிட்டு அணில் கடி-காக்கா கடி கடித்தான்!

"அய்யோ, பல்லு பதியுதுங்க..."

"சரிங்க தலைக்குக் கீழே இறங்குவோமா?" என்று சொல்லும் போது...

***

அடியே... என்னடி நித்திரை என்று அம்மா தலையணையால் ஒரு அடி போட்டாள்.
"முப்பத்தஞ்சு வயசாகுது. எரும மாடு மாதிரி நித்திரை. நானும் பத்து வருஷமா எவனாவது ஒருத்தன் தலையில இவளக்கட்டி வச்சிடலாம்னு பார்த்தா... இந்த மூதேவி தலையெழுத்து முதிர் கன்னியாகவே கழியணும்னு இருக்கு"
எப்போதும் போல் புலம்பிக்கொண்டே அறையைக்கூட்டிக்கொண்டு போனாள் அம்மா.

வெளியே மழை வலுத்துக்கொண்டிருக்க, இன்னும் கொஞ்சம் நித்திரை செய்யலாம் போல தோணியது கீதாவுக்கு. ■

www.padippakam.com

# கொடுத்தவன் மேல் ஜாதி கொடுக்காதவன் கீழ் ஜாதி



அன்டன் பாலசிங்கம் எழுதிய “விடுதலை” நூலில் இருந்து

(சென்ற இதழின் தொடர்ச்சி)

....இதனால் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் பொதுவாக ஈழப் போரா ளிகள் மீது வெறுப்புணர்வு வளரத் தொடங்கியது. பல்வேறான ஈழப் போராளி அமைப்புகள் பற்றியும் அவர்கள் மத்தியில் நிலவிய வேறு பாடுகளையும் புரிந்து கொள்ளத் தவறிய தமிழகப் பத்திரிகைகள் எல்லோரையுமே "ஈழத்துப் புலி

# தேசியதலைவரும்



படிப்பகம்

கள்" என்றும், "ஈழத்துத் தீவிரவாதிகள்" என்றும் பொதுவாகக் கண்டனக் குரல் எழுப்பின.

இதனால் எமது அமைப்பிற்குச் சிக்கல் எழுந்தது. பத்திரிகைகள் மட்டுமன்றித் தமிழகக் காவல் துறையினரும் இக் குழப்பத்திற்குள் சிக்கி எமக்கு விரோதமாகத் திரும்பினர். வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து தமிழ் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் பாதிக்கப்பட்ட பொழுது முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கும் இது வொரு சவாலாக எழுந்தது.

ஏனைய அமைப்புகளின் வன்முறைச் சம்பவங்கள் தமிழ் நாட்டை ஆட்டிப் படைத்தன. உதாரணமாக 1984 இல் தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் ஸ்ரீலங்கா எயர்லைன் விமானத்திற்கு குறி வைத்த வெடிகுண்டு, சென்னை மீனம்பாக்கம் விமானநிலையத்தில் தவறுதலாக வெடித்ததில் 30 பொதுமக்கள் கொல்லப் பட்டதுடன் 50 பேர் வரை படுகாயமடைந்தனர். இந்த வன்முறைச் சம்பவம் தமிழ்நாட்டை மட்டுமன்றி முழு இந்தியாவையுமே உலுப்பிவிட்டது. விடுதலைப் புலிகளைத் தவிர ஏனைய அமைப்புகள் இந்தியாவில் பயிற்சி எடுத்த போராளிகளை உடனடியாகத் தமிழீழ களத்திற்கு அனுப்ப முடியவில்லை. அதற்கான போரியல் திட்டங்களும் அவர்களிடம் இருக்கவில்லை. அத்துடன் பெருந் தொகையான போராளிகளைப் பராமரிக்க அவர்களிடம் பண பலமும் இருக்கவில்லை. இதனால் சில அமைப்புகளின் கட்டுப்பாடு உடைந்தது. ஒழுங்கீனமும் சீர் கேடும் தலைதூக்கியது. இலக்கின்றி அலைந்த ஈழத்து இளைஞர்கள் சமூக விரோதச் செயல்களில் இறங்கினர். தமிழ்நாட்டுக் கிராமப் புறங்களிலுள்ள உள்ளூர் மக்கள் சிலர் கொல்லப்பட்டனர். வீடுகள் சூறையாடப்பட்டன. 1985 டிசம்பரில் வேதாரணியத்தில் ஆயுதம் தரித்த புளொட் உறுப்பினர்கள் உள்ளூர் விவசாயிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் கொல்லப்பட்டும் பலர் படுகாயமடைந்தனர்.

ஈழப் போராளி அமைப்புகள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு தமிழக ஊடகங்கள் வற்புறுத்தின. ஈழ விடுதலை அமைப்புகள் மீது பழிவாங்கத் தமிழக காவற்துறையினருக்கு ஒரு அரிய வாய்ப்புக் கிடைத்தது.

எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் நிர்வாக ஆட்சியில் சர்வ திகாரம் படைத்த உயர் அதிகாரியாக விளங்கியவர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் கே. மோகனதாஸ்.

# புரட்சித்தலைவரும்

www.padippakam.com



மிகக் குள்ளமாக இருந்தாலும் வல்லமை படைத்தவர். தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கிற்கு இவரே பொறுப் பதிகாரி. தமிழகப் புலனாய்வுப் பிரிவின் தலைவரும் இவரே. இவர் எம். ஜி. ஆருக்கு விசுவாசியாகக் காட்டிக்கொண்ட போதும் இலங்கை அரசாங்கத் துடன் மிகவும் நெருக்கமான உறவை வைத்திருந்தார். ஈழப் போராளிகள் பற்றிய சகல விடயங் களையும் இலங்கைப்புலனாய்வுத் துறையினருக்குத் தகவல் கொடுத்து வந்தார். இலங்கை அரசுடன் மிகவும் நெருங்கியவர் என்பதால், ஈழப்போராளிகளுக்கு இந்திய மத்திய அரசு இராணுவப் பயிற்சி வழங்கி ஊக்குவிப்பது இவருக்குப் பிடிக்கவில்லை. இந்தியப் புல னாய்வுக் கட்டமைப்பின் உள் துறை (I.B) வெளித்துறை (RAW) பிரிவுகளைச் சேர்ந்த உயர் அதி காரிகள் ஈழ விடுதலை அமைப்பு களுடன் இரகசியத் தொடர்புகளை வைத்திருப்பதையும் இவர் விரும் பவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக முதலமைச்சர் எம்.ஜி.ஆர் விடுதலைப் புலிகளுடன் கொண்டி ருந்த நல்லுறவையும் இவர் வெறுத் தார். சூளைமேட்டு துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தை சாக்காக வைத் து, விடுதலைப் புலிகள் உட்பட சகல ஈழவிடுதலை அமைப்புகள் மீதும் பழிவாங்கும் நடவடிக் கையில் இறங்கினார்.

இது ஒரு புறமிருக்க கர்நாடக மாநிலத்தின் தலைநகரான பெங் களூரில் நவம்பர் 15-17 வரை சார்க் மாநாடு நடைபெறவிருந்தது. இலங் கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த் தனா இம் மாநாட்டில் பங்குபற்ற



படிப்பகம்

www.padippakam.com

இருந்தார். ஜனாதிபதி ஜெயவர்தனாவுக்கு ஈழத்துப் போராளிகளால் உயிராபத்து ஏற்படலாம் என அச்சம் கொண்ட இந்திய உள்துறை அமைச்சு, தமிழ்நாட்டில் கடும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழக அரசைக் கேட்டுக் கொண்டது. இந்தக் கோரிக்கையும் மோகனதாஸிற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. விடுதலைப் புலிகள் உட்பட தமிழ்நாடு அடங்கிலும் செயற்பட்டு வந்த சகல ஈழ விடுதலை அமைப்புகளையும் நிராயுதபாணிகளாக்க மோகனதாஸ் திட்டமிட்டார். தனது திட்டத்திற்கு "புலி நடவடிக்கை" (Operation Tiger) எனவும் பெயரிட்டார்.

தனது ஆயுதக்களைவு நடவடிக் கைக்கு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், தமிழக முதல்வர் எம்.ஜி ஆரும் முழு ஆதரவு தந்ததாகப் பின்பு எழுதிய ஒரு நூலில் (எம்.ஜி.ஆர் மறைந்த பின்பு MGR: The Man and the Myth என்ற நூலில்) கூறுகின்றார். மத்திய அரசின் அழுத்தத்திற்குப் பணிந்து ராஜீவ்காந்தியை திருப்திப்படுத் துவதற்காக மோகனதாஸின் ஆயுதக்களைவு நடவடிக்கைக்கு எம்.ஜி.ஆர் மிகவும் தயக்கத்துடன் இணங்கியதாகப் பின்பு அறிந்தோம். ஆயினும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட முறையும், தமிழகப் பொலிஸாரால் தலைவர் பிரபாகரனுக்கும் எனக்கும் இழைக்கப்பட்ட அவமானமும் எம்.ஜி.ஆரை ஆழமாகக் கவலை கொள்ளச் செய்தது.

1986 நவம்பர் எட்டாம் திகதி அதிகாலை ஆறு மணிஇருக்கும் மோகனதாஸின் அதிரடிப் படைகள் ஈழப்போராளி அமைப்புகளை நிராயுதபாணிகளாக்கும் "புலி நடவடிக்கையில்" குதித்தன. போராளிகளின் சகல வீடுகளும் பாசறைகளும் சூறையாடப் பட்டன. எனது வீட்டுக்குள் புகுந்த ஆயுதம் தரித்த காவல்துறை அணியொன்று, வீட்டைச் சல்லடை போட்டுத் தேடியது. எனது மனைவியின் கைத்துப்பாக்கியை மட்டும் அவர்களால் கைப்பற்ற முடிந்தது. தேடுதல் முடிந்ததும் என்னைக் கைது

முதல் நண்பி:
"ஒவ்வொரு நாளும் ஒரே சட்டையை தான் போடுறியே ஏன்?"
மற்ற நண்பி:
"போட்ட சட்டையோட என் புருசனை நம்பி ஓடி வந்தேன். அதுக்கப்புறம் அவர் சட்டையே வாங்கி தரல்லை."





படிப்பகம்

செய்து உள்ளூர் காவல் நிலையம் ஒன்றுக்கு அழைத்துச் சென்றார்கள். பல கோணங்களில் நிறுத்திப் படம் பிடித்தார்கள். கை ரேகையைப் பதிவு செய்தார்கள். தகாத வார்த்தைகளைப் பிரயோகித்து அவமானப்படுத்தினார்கள். உட்காரவைக்கவில்லை. தண்ணீர் கேட்டும் தரவில்லை. மோகன தாஸின் பணிப்பின் பேரில் திட்டமிட்டு இம்சைப்படுத்தியது போல தெரிந்தது. தலைவர் பிரபாகரனுக்கும் இதே கதிதான். அவரும் அவரது வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டு வேறொரு காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். படம் பிடித்து கைரேகை பதிந்து குற்றவாளியைப் போல விசாரிக்கப்பட்டு இழிவு படுத்தப்பட்டார். பலமணி நேரமாக நிகழ்ந்த குறுக்கு விசாரணையின் பின்னர் எம்மை வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். வீட்டுக்கு முன்பாக ஆயுதம் தரித்த காவற்துறையினர் நிலையெடுத்து நின்றனர். நானும் பிரபாகரனும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தோம். ஆயுதக்களைவு பற்றியும் எனக்கும் பிரபாவுக்கும் இழைக்கப்பட்ட அவமானம் பற்றியும் எம்.ஜி.ஆருக்கு முறையிட நான் எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. எந்தக் காரணத்திற்காகவும் வீட்டை விட்டு வெளியேற முடியாது என்றார்கள். அன்றைய தினம் எம்.ஜி.ஆர் சென்னையில் இருக்கவில்லை. புதுடில்லியில் இருந்ததாகப் பின்னர் அறிந்தோம்.

தலைவர் பிரபாகரன் மிகவும் கொதிப்படைந்தார். ஒரு குற்றவாளி போல் காவல்துறையினரால் கைதாகி காவல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. தனது சுயகௌரவத்திற்கு மட்டுமன்றி தமிழீழ மக்களின் சுதந்திர இயக்கத்திற்கும் ஏற்பட்ட இழுக்காகவும் இதனை அவர் கருதினார். தமிழ்நாட்டில் ஏனைய அமைப்புகள் புரியும் குற்றச் செயல்களுக்கும் அடாவடித்தனங்களுக்கும் விடுதலைப்புலிகள் இயக்கம் தண்டிக்கப்பட்டதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இந்தச் சம்பவத்தை அடுத்து தமிழ்நாட்டு அரசு மீது அவர் வைத்திருந்த நம்பிக்கை இடிந்துபோனது. முதலமைச்சரின் அனுமதியின்றி இக்கைது நடவடிக்கையும் ஆயுதக்களைவும் நடைபெற்றிருக்க முடியாது எனப் பிரபாகரன் கருதினார். ஆயினும் காவல் நிலையத்தில் வைத்து பிரபாகரனையும் என்னையும் அவமானப்படுத்தியதில் மோகனதாஸிற்குப் பெரும் பங்குண்டு என்பதையும் அவர் அறிவார். எனினும் தொடர்ந்தும் தமிழ்நாட்டில் தஞ்சம் பூண்டிருப்பது ஆபத்தானது என்பதை உணர்ந்தார்.

ஈழ விடுதலை அமைப்புகளை நிராயுதபாணிகளாக்கி, அவ்வமைப்புகளின் தலைவர்களை வீட்டுக் காவலில் வைத்துவிட்டுப் பெங்களூரில் சார்க் மாநாட்டிற்கான ஆயத்தங்களை செய்தது மத்திய அரசு. சார்க் மாநாட்டிற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா வருகைதர இருப்பதால் பெங்களூரில் வைத்து இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் ஒரு முயற்சியை

www.padippakam.com

மேற்கொள்வதற்கு ராஜீவ்காந்தி விரும்பினார்.

அக்கால கட்டத்தில் கிழக்கு மாகாணத்தை மூன்று கூறுகளாகப் பிரித்து அதிகாரப் பகிர்வு செய்யும் ஒரு தீர்வுத் திட்டத்தை இந்திய - இலங்கை அரசுகள் தயாரித்தன. தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத இத்திட்டத்தைப் பெங்களூரில் வைத்து விடுதலைப் புலிகளிடம் திணித்துவிட வேண்டும் என ராஜீவ்காந்தி திட்டமிட்டார். பெங்களூர் மாநாட்டிற்கு ஒரு சில தினங்களுக்கு முன்பாக தலைவர் பிரபாகரனுக்கும் எனக்கும் போடப்பட்டிருந்த வீட்டுக் காவல் திடீரென நீக்கப்பட்டது. நவம்பர் 16ஆம் திகதி இரவு பிரபாகரனும் நானும் சென்னை விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்த ஒரு விமானப்படை விமானத்தில் பெங்களூர் கொண்டு செல்லப் பட்டோம்.

பெங்களூரிலுள்ள ராஜபவனுக்கு நாம் போய்ச் சேர இரவு பத்து மணி ஆகிவிட்டது. அங்கு எம்மைச் சந்திப்பதற்காக இந்திய அரசாங்கத்தின் பிரமுகர்கள் பலர் காத்திருந்தனர். அமைச்சர் நட்வார் சிங், வெளிவிவகாரச் செயலர் வெங்கடேஸ்வரன், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஜே. என். டிக்சிட், வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த குல்திப் சகாதேவ், மற்றும் இந்தியப் புலனாய்வுத் துறை உயர் அதிகாரிகள் ஆகியோர் அங்கிருந்தனர்.

நாம் அங்கு சென்றதுமே முதலில் டிக்சிட் எம்மை வரவேற்று நாம் எதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதைக் கூறி, கிழக்கு மாகாணத்தைக் கூறு போடும் தீர்வுத் திட்டம் பற்றி ஒரு விளக்கமும் தந்தார். ஏற்கனவே அவமானப்பட்டு நொந்து போயிருந்த எமக்கு ஏற்கமுடியாத ஒரு தீர்வுத் திட்டத்தை இந்தியத் தூதுவர் திணிக்க முயன்றது கடும் சினத்தை ஏற்படுத்தியது.

கடுமையான தொனியில் ஒரே வசனத்தில் பதிலளித்தார் பிரபாகரன். "தமிழர் தாயகத்தைப் பிரிக்கவும் முடியாது பிரிக்கவும் விடமாட்டோம்" என்று அடித்துச் சொன்னார். கிழக்கு மாகாண வரை படத்தைச் சுட்டிக் காட்டி விளக்கங்கள் கூறி ஏதோ வெல்லாம் அலம்பிக் கொண்டிருந்தார் டிக்சிட். எதிலுமே அக்கறை காட்



"இந்த கொட்டடல்ல எல்லாமே "செல்ப் சேவிஸ்"தான் "இதிலென்ற விசயம் இருக்கு?" "நாமளே மாவாட்டி தேவையானதை செய்து சாப்பிடவேணும்?"



படிப்பகம்

www.padippakam.com

டாது, பதிலும் கூறாது இறுக்கமாக மௌனம் சாதித்தார் பிரபா. இறுதியில் நான் குறுக்கிட்டு, "எமது இயக்கத்தின் நிலைப் பாட்டை இரத்தினச் சுருக்கமாகச் சொல்லவிட்டார் பிரபாகரன். தமிழர் தாயகத்தைக் கூறுபோடும் எந்தத் திட்டத்தையும் நாம் ஏற்கப் போவதில்லை. இது பற்றிக் கதைத்தும் பலனில்லை" என்றேன். என்னையும் பிரபாவையும் முறைத்துப் பார்த்துவிட்டு அங்கிருந்து சென்றார் டிக்சிட். இந்தியத் தூதுவரின் முயற்சி தோல்வியில் முடிந்ததும், அடுத்ததாக வெங்கடேஸ்வரனைக் களத்தில் இறக்கினார்கள். ராஜீவ் காந்தியின் நிர்வாகத்திலுள்ள ஒரு முக்கிய தமிழ் அதிகாரி என்பதால் அவர் மூலம் ஏதாவது சாதிக்கலாம் என எண்ணினார்கள் போலும். வெங்கடேஸ்வரன் மிகவும் அன்பாகவும், பண்பாகவும் கதைத்தார். எமது நிலைப்பாட்டை இந்தியத் தூதுவர் தமக்கு எடுத்து ரைத்ததாகச் சொன்னார். ஆயினும் இப்பொழுது முன்வைக்கப்படும் தீர்வுத் திட்டம் நிரந்தரமானதன்று என்றும் ஒரு இடைக்கால ஒழுங்கு என்றும் விளக்கினார். இலங்கையின் இனப்பிரச்சினைக்கு வெகு விரைவில் ஒரு தீர்வு காணப்படவேண்டும் என்பதில் ராஜீவ் ஆர்வமாக இருக்கிறார். இந்த சார்க் மாநாட்டில் ஒரு தீர்வு எட்டப்படுமானல் அது அவருக்கு ஒரு பெரிய அரசியல் இராஜதந்திர வெற்றியாக அமையும் என்றார். மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டார். பிரபாகரனுக்கு கோபம் வந்துவிட்டது. "ராஜீவ்காந்தியைத் திருப்திப்படுத்துவதற்காக எமது விடுதலைப் போராட்டத்தை விற்கவா சொல்கிறீர்கள்?" என்ற கடிந்து சொன்னார். வெங்கடேஸ்வரன் மலைத்துப் போனார். "எனக்கு உங்களது மனநிலை புரிகிறது" என்று சொல்லி ஒருவாறு சமாளித்துக் கொண்டு விடைபெற்றார். அடுத்ததாக, இந்தியப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் வந்தார்கள். எவ்வளவோ முயற்சித்துப் பார்த்தார்கள். முடிவில்லை. பிரபாகரனை நெகிழ்வுபடுத்தும் இறுதி ஆயுதமாக எம்.ஜி.ஆரைப் பயன்படுத்த முடிவாகிற்று. மறுநாள் தமிழக முதல்வர் பெங்களூருக்கு அழைக்கப்பட்டார்.

> இள வயதுப் பெண்களில் பல பேர் ஒரு நாளில் இரண்டு முறை பல் துலக்குகிறார்கள் ஆனால் இளவயது ஆண்களில் 40% பேர் மட்டுமே அப்படிச் செய்கிறார்கள்.

தலைவர் பிரபாகரனும் நானும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களைச் சந்தித்தபொழுது, அவரோடு அமைச்சர் பண்டுருட்டி இராமச்சந்திரனும் இருந்தார். நாம் எமது நிலைப்பாட்டை அவருக்குத் தெளிவாக விளக்கினோம். வரலாற்று ரீதியாக தமிழ் மக்கள் வாழ்ந்து வரும் தாயக பூமியைக் கூறுபோடும் திட்டம் ஒன்றைத் தயாரித்து அதனை எம் மீது திணித்துவிட ராஜீவ் அரசு முயற்சிக்கிறது என்பதைக கூறி, இத்திட்டத்தை எம்மால் ஏற்க முடியாது என உறுதிபடக் கூறினோம். எமது



படிப்பகம்


Junaitha Jewellers
(Pvt) Limited.
171, Sea Street,
Colombo - 11. Sri Lanka.
Tel: 0112-543485, 2543488
Fax: 2335774

www.padippakam.com

வாதத்தை எம்.ஜி.ஆர் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தார். எமது நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்வது போன்று இடையிடையே தலையையும் அசைத்துக் கொண்டார். நாம் பேசி முடிந்ததும், அமைச்சர் பண்டுருட்டியைப் பார்த்து, "ஈழ தமிழர் வாழும் பிரதேசத்தை எதற்காகக் கூறு போட்டுப் பிரிக்கவேண்டும்" என்ற கேட்டார் எம்.ஜி.ஆர்.

"கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் தமிழர்களுடன் சிங்களவர்களும் முஸ்லிம்களும் வாழ்ந்து வருகிறார்கள். அதனால்தான் கிழக்கு மாகாணத்தைக் கூறுபோட முனைகிறார்கள்" என்றார் அமைச்சர். உடனே நான் குறுக்கிட்டு, "கிழக்கில் தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் வாழ்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் கிழக்கில் பெரும்பான்மையான சிங்கள வர்கள் பலவந்தமாகச் சிங்கள ஆட்சியாளர்களின் உதவியுடன் தமிழர் நிலத்தில் குடியேற்றப்பட்டவர்கள்." என்றேன். எம்.ஜி.ஆர் சிறிது நேரம் சிந்தித்தார். பின்பு அமைச்சர் பண்டுருட்டியைப் பார்த்து, "தமிழர் வாழும் நிலம் தமிழருக்குச் சொந்தம். சிங்களவர்கள் வாழும் நிலம் சிங்களவர்களுக்குச் சொந்தம் அது தானே இந்திய அரசு கூறும் நியாயம்" என்று கேட்டார். அதற்கு ஆமாப் போட்டார் அமைச்சர்.

எம்.ஜி.ஆருக்கும் பண்டுருட்டியாருக்கும் மத்தியிலான விவாதம் ஒரு விசித்திரமான திசையை நோக்கி நகர்ந்தது. எம்.ஜி.ஆர் கேள்விகளை அடுக்கிச் செல்ல "ஆமா" போட்டுக்கொண்டிருந்தார் அமைச்சர்.

"வடக்குக்கிழக்கில் பெரும்பான்மையாக வாழ்பவர்கள் யார்? தமிழர்கள் அல்லவா?"

"ஆமா சார்"

"தென் இலங்கையை எடுத்துக் கொண்டால் மலைநாட்டில் பெரும்பான்மையாக வாழ்பவர்கள் யார்? தமிழர்கள் அல்லவா?"



"சேர்! ஊருக்கு போன இடத்தில மழையில் நனைந்து காய்ச்சல் வந்துடுச்சு... அதுதான் மெடிக்கல் லீவு போட்டுட்டேன்.

"சரி...சேர்ட்டிபிக்கட் இருக்கா...?

"இந்தாங்க சேர்"

"டாக்டர் சேர்ட்டிபிக்கட் யாருக்கு வேணும்? ஊரில் மழை பெய்ததுன்னு பிரதேச செயலாளரிடம் சேர்ட்டிபிக்கட் வாங்கிட்டு வா!"



படிப்பகம்

சிறிது தயக்கத்துடன் ஆமாப் போட்டார் அமைச்சர். "முழு இலங்கையிலும் தமிழர்கள் தானே பரவலாக வாழ்கிறார்கள் இல்லையா?"

"ஆமா சார்"

"அப்படிப் பார்த்தால், இந்திய அரசின் நியாயப்படி முழு இலங்கைத் தீவும் தமிழர்களுக்குத் தானே சொந்தமாக்கப்பட வேண்டும். பின்பு எதற்காக தமிழர் நிலத்தைப் பிரிக்கவேண்டும்? முழு இலங்கையையும் புலிகளுக்கு அல்லவா கொடுக்க வேண்டும்?" என்றார் எம்.ஜி.ஆர். சொல்வது தெரியாது தடுமாறினார் பண்டுருட்டியார்.

"என்ன நான் சொல்வதில் நியாயமிருக்கின்றது தானே?" என்று கூறி அமைச்சரைப் பார்த்தார் எம்.ஜி.ஆர். இம்முறை பண்டுருட்டியாரின் அடித்தொண்டையிலிருந்து "ஆமா" என்ற சொல் ஆர்வமிழந்து அரைகுறையாக வெளிவந்தது.

நானும் பிரபாவும் எதுவுமே பேசவில்லை. மௌனமாக இருந்து உரையாடலை ரசித்துக் கொண்டிருந்தோம். எம்.ஜி.ஆர் எம்மைப் பார்த்து, "நீங்கள் போகலாம். இந்தியாவின் யோசனையை ஏற்க முடியாது என நீங்கள் கருதினால் ஏற்க வேண்டாம். ஏற்றுக்கொள்ளும்படி நான் வற்புறுத்த மாட்டேன்" என்றார்.

எம்.ஜி.ஆருக்கு நன்றி கூறிவிட்டு அவரது அறையிலிருந்து வெளியேறி நடந்து கொண்டிருந்தபொழுது, எம்மை அழைத்தவாறு அமைச்சர் பண்டுருட்டி எமக்குப் பின்னால் ஓட்டமும் நடையுமாக வந்து சேர்ந்தார். "முழு இலங்கையையும் புலிகளுக்குக் கொடுக்கவேண்டும் என்று தலைவர் சொன்னார் அல்லவா? அதனை சீரியஸாக எடுக்க வேண்டாம். ஒரு வாதத்திற்காக அப்படிச் சொன்னார். தயவு செய்து பத்திரிகையாளர்களிடம் இது பற்றிக் கதைக்கவேண்டாம்" என்று மன்றாட்டமாகக் கேட்டார். நாம் அதற்கு இணக்கம் தெரிவித்தோம்.

**(அடுத்த இதழிலும் தொடரும்)**

**ஒரு குடிகாரன் கீழே குனிந்து எதையோ தேடிக் கொண்டிருந்தான். அதைக் கண்ட ஒருவன்.**
**ஒருவன்: நீ என்ன தேடுகிறாய்?**
**குடிகாரன்: என் கைக்கடிகாரம் கீழே விழுந்து விட்டது.**
**ஒருவன்: நானும் தேடிப் பார்த்தேன் கைக்கடிகாரம் அகப்படவில்லை. நீ கைக்கடிகாரத்தை தொலைத்தது உண்மையா?**
**குடிகாரன்: ஆமாம்.**
**ஒருவன்: எங்கே தொலைத்தாய்?**
**குடிகாரன்: அடுத்த தெருவில் தொலைத்தேன்.**
**ஒருவன்: அதை இங்கே ஏன் தேடுகிறாய்?**
**குடிகாரன்: அந்த தெருவில் லைட் இல்லை வெளிச்சமும் இல்லையே.**

www.padippakam.com

# “கொப்பி பாஸ்” முதல் பல்கலைக்கழகம் வரை

அப்பொழுது உயர்தரம் படித்துக் கொண்டிருந்தேன். "கொப்பி பாஸ்" தான் நடைமுறையில் இருந்தது. அதுவும் காலை ஆறுமணிக்கு எடுத்தால் மாலை ஐந்து மணிக்குள் அந்த அகதி நிலையத்திற்கு வந்திட வேண்டும். உயர்தரப் பரீட்சையும் கிட்டிக் கொண்டிருந்தது. படிப்பதற்கு எந்த வசதியும் கிடையாது? சண்டையும் சச்சரவுகயுமாகவே முகாம் இருக்கும். இரவு பன்னிரண்டு மணிக்குப் பின்னர்தான் முகாம் அமைதி கொள்ளத் தொடங்கும். இரவு பன்னிரண்டு மணிக்கு எனது படிப்பை ஆரம்பித்து கிட்டத்தட்ட நான்கு மணிவரை படிப்பேன். என்னவோ தெரியாது மின்சார வசதிமட்டும் போதியளவு இருந்தது.



பொலிஸ்காரர்களுக்கு சாராயம் வாங்கிக் கொடுத்தால் இரவில் வேலைக்கு போகவிடுவார்கள். எங்கள் முகாமுக்கு பக்கத்தில் பெரிய அரிசி ஆலையொன்று இருந்தது. நானும் எனது படிப்பு செலவை கவனிப்பதற்காக

படிப்பகம்

www.padippakam.com

# அகதிமுகாம் அவலங்களை அனுபவித்துக் கொண்டே கற்றுத்தேறி பல்கலைக்கழகம் சென்ற ஒரு மாணவனின் குமுறும் "மனச்சாட்சி"



அரைபோத்தல் சாராயத்தை வாங்கி கொடுத்து இரவு பாஸ் எடுத்துக்கொண்டு வேலைக்குச் சென்றேன். என்னுடைய அப்பா அப்போது சாதாரண விறகு வியாபாரியாகத்தான் இருந்தார். இதனால் அவரால் எனது படிப்புச் செலவை தாங்கிக் கொள்ள முடியவில்லை நான் இடை இடையே அரிசி ஆலைக்கு வேலைக்கு போவதுண்டு. 3000 கிலோ நெல்லை இயந்திரத்தில் கொட்டி அரைப்பதுண்டு.

1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அகதிமுகாமில் 12 இற்கும் மேற்பட்ட பிரிவுகள் உண்டு. கிட்டத்தட்ட 28,000 க்கும் மேற்பட்ட மக்கள் இங்கு வாழ்ந்தார்கள் இங்கு நடக்கும் சம்பவங்கள் எதுவும் வெளியுலகிற்குத் தெரிவதில்லை. முன்வாசலில் நலன்புரிநிலையம் என்ற பதாதை வரவேற்றாலும் உள்ளே சென்றதும்தான் தெரியும் நலன்கெட்ட நிலையமென்று.

நலன்புரி நிலையத்தில் கிட்டத்தட்ட பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் இருக்கின்றார்கள். இவர்கள் காதல், மது, திறந்த படங்கள், பெற்றோர்களை மதிக்காமல் தங்களின் மனம் போன போக்கில் முடிவெடுத்தல் போன்ற பல்வேறுபட்ட நெறிகளினால் வாழ்க்கையை சீரழித்துக் கொள்கின்றார்கள். வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று மனம் வைத்தால் நாம் சில தியாகங்களைச் செய்ய வேண்டும் என்பதை இவர்கள் உணராமல் இருக்கிறார்கள்.

இன்றுவரை அகதிமுகாமில் வாழ்கின்ற பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்களும் ஏன் சமாதான புரிந்துணர்வு ஒப்பந்தம் வந்ததும் வீடுகளுக்குப் போகாமல் இருக்கின்றார்கள் என்று சந்தேகம் தோன்றலாம். பொது அமைப்புக்களும், அரசாங்க நிறுவனங்களும் இவர்களை சாட்டாக வைத்து வெளிநாட்டில் இருந்து உதவிகளைப்பெற்று குளிர்காய்கின்றனர். போரினால் உடைமைகள் உறவுகள் எல்லாவற்றையும் இழந்து வாழும் மக்கள் விரக்தி நிலையை அடைந்து விட்டார்கள். இனி


படிப்பகம்

www.padippakam.com

எங்களால் வாழ்க்கையில் முன்னுக்கு வர முடியாது என்ற நிலைக்கு அவர்களின் சிந்தனைகள் முடக்கப்பட்டுவிட்டன. இந்த நிலையை மாற்றி அவர்களுக்கு போதிய அறிவு வழங்கப்பட வேண்டும். இதைவிட அவர்களுக்கு எங்களாலும் வாழமுடியும் என்ற மனத் தைரியத்தையும் ஊட்டவேண்டும். அவர்கள் மீள் குடியமர்வதற்கு அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும்.

சிறிய வயதில் நானும் எனது இரண்டு தம்பிமாரும் செல்லமாக வளர்ந்தோம். எப்போது "ஜெயசிக்குரு" இராணுவ நடவடிக்கை தொடங்கியதோ அன்று தொடங்கி எமது வாழ்க்கையில் வறுமை தாண்டவமாடத் தொடங்கியது. வறுமைக்கு ஈடுகொடுக்க முடியாமல் நலன்புரிநிலையத்தை வந்தடைந்தோம். இங்கு வந்ததும்தான் தெரிந்தது இதைவிட சொந்தஊரான மாங்குளத்திலேயே இருந்திருக்கலாம் என்று! எதுவுமே பட்டபின் தான் தெரிகிறது.

நான் கல்வியைத்தான் காதலித்தேன். எத்தனையோ தடைகள் வந்திருந்தன. பொலிசார் பாஸ் தராமல் பள்ளிக்கூடத்திற்கு செல்லவிடாமல் தடை செய்திருப்பார்கள். ஆனால் பள்ளிக்கூடத்திற்கு போகாவிட்டாலும் அந்த நேரசூசியின் படி கொளுத்தும் வெயிலில் சுயமாக பாடங்களைப்படிப்பேன். மிகவும் பதிவாக அடைக்கப்பட்ட தரப்பாவில் வெயில்பட்டு சுட்டெரிக்கும். இருந்தும் இங்குவந்த கொடுமைக்காக அதையெல்லாம் பொறுத்துக்கொண்டு படிப்பேன். இதைப் போல எல்லா இளைஞர்களும் நினைத்தால் கட்டாயம் வாழ்க்கையில் முன்னேற முடியும்.

குளிப்பதற்கு தண்ணீர் இல்லாமலும், படுப்பதற்கு இடமில்லாமலும், படிப்பதற்கு வசதியில்லாமலும், சாப்பிடுவதற்கு போதிய உணவில்லாமலும் கசிப்பு உற்பத்தி இடத்தில் இருந்து படித்துத்தான் பல்கலைக்கழகம் சென்றேன். அகதிமுகாமில் இருக்கும் ஒவ்

**(27 ஆம் பக்கம் பார்க்க)**

**"அகதிமுகாமில் வாழும் மக்களே நீங்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று மனம் வைத்து செயற்பட்டால் நிச்சயம் முடியும். மனிதனால் முடியாதது என எதுவும் இல்லை."**



படிப்பகம்

www.padippakam.com

# "ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு"

(சென்ற இதழின் தொடர்ச்சி)

அரசியல் அமைப்புகள் திருத்தம்

1956 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரை குறைந்தது இரண்டுமுறையாவது இலங்கை அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டு. முதன் முறையாக கூட்டரசாங்கம் அமைத்த சுதந்திரக் கட்சியால் 1970 இல் உருவாக்கப்பட்டு சட்டமாக்கப்பட்டது. இதை ஐக்கிய தேசியக் கட்சியும் அன்றைய தமிழரசுக் கட்சியும் மற்றும் கட்சிகளும் எதிர்த்து வாக்களித்தன. அறுதிப் பெரும்பான்மைக்கு எதிராக சிறுபான்மையாக இருந்த அங்கத்தவர்கள் எதுவும் செய்ய முடியவில்லை என்பதால் இதுவும் ஒரு மாற்றுக் கொள்கைதான்.

அதே போன்று 1978 ஆம் ஆண்டும் ஐந்தில் நான்கு பங்கு பெரும்பான்மையைக் கொண்ட

(அரசியல்) மாற்று கொள்கைகள்

POLICY ALTERNATIVES

தொடர் - 5

விடுமடையன் முட்டாள்

www.padippakam.com

# மாற்றுக்கருத்துக்களை முன் வைக்கும்போது.....

ஐக்கிய தேசியக் கட்சி 1972 ஆம் ஆண்டு நிறைவேற்றப் பட்ட அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பூரணமாக மாற்றி யமைத்த போது சுதந்திரக்கட்சி அங்கத்தவர்கள் செய்வதற்கு ஒன்றும் இல்லாத நிலையில் எதிர்த்து மட்டும் வாக்களித்தனர். இதுவும் ஒரு மாற்றுக் கொள்கை தான்.

## 1994 தேர்தல்

1994இல் நடைபெற்ற தேர்த லின் போது நிறைவேற்று ஜனாதி பதி முறையையும் தேர்தல் முறை யையும் மாற்றியமைப்பதற்காக மக்களிடம் வாக்குக் கேட்டு வெற்றி பெற்ற சுதந்திரக்கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி களின் அங்கத்தவர்களையும் உள்ள டக்கி அறுதிப் பெரும்பான்மை யைக் கொண்டிருந்தது. அத்துடன் ஆறு வருட ஆட்சியைப் பூர்த்தி செய்திருந்தும் கூட குறித்த வாக் கைக் காப்பாற்ற எதுவித முயற்சி யும் செய்வில்லை. இதுவும் ஒரு மாற்றுக் கொள்கைதான்.

அதே வேளை 1977 ஆம் ஆண்டு தேர்தல் முடிந்ததும் நடத்தப்பட்ட இனப் படுகொலை களைத் தொடர்ந்து தமிழ் மக்களின் சுயாட்சிக் கோரிக்கை பற்றிப் பரிசீலிப்பதற்காக சர்வகட்சி மாநாடு ஒன்றைக் கூட்டுவதாக அறிவித்து அதன்படி மாவட்ட அபிவிருத்திச் சபைச் சட்டம் 1981 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இதன் மூலம் சுயாட்சிக் கோரிக் கைக்கு மாற்றிடாகும் எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஒப் புதல் அளிக்கவில்லை என்றாலும் மிகுந்த பிரயாசைப்பட்டு சிங்களக் கட்சிகளின் அங்கத்தவர்களின் துாண்டுதலினால் தேர்தலில் போட்டியிட்டதுடன் வடக்குக் கிழக்கில் உள்ள சகல மாவட்ட சபைகளிலும் ஏகோபித்த வெற்றி பெற்றனர். இதைச் சகிக்க முடியாத அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன மாவட்ட மந்திரி ஒருவரை நியமித்து அவரே அச் சபைகளுக்குத் தலைவராகவும் ஆக்கினார். இது ஒரு சதி என்பது வெள்ளிடை மலை. இம்மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு என்ன நடந்தது என்பது சரித்திரம்.

இலங்கையில் அரசியலில் எதற் கெடுத்தாலும் "ஆத்திரக்கார னுக்குப் புத்தி மட்டு" என்பது போல முன்வைத்த எண்ணத்தைச் செயற்படுத்துவது தான் வழ மையாக இருந்தது. பின் அதைச் சரி என்று சாதிப்பது வழக்கமாகி விட்டது. இதற்கு உதாரணமாக 1947 இல் ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் 24 ஆண்டுகளின் பின் முதல் முறை யாக 1972 இல் முற்றிலும் மாற்றப் பட்டது. 1972 இல் இயற்றப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் ஆறு வருடங்களின் பின் 1978 இல் மாற்றப்பட்டது. 1994இல் மாற்றுவ தற்கு அறுதிப் பெரும்பான்மை கேட்டு தேர்தலிலும் வெற்றி பெற்ற சுதந்திரக் கட்சி அதை மாற்றுவ தற்கு மூன்று முறை யோசனை களை முன்வைத்தது. ஆயினும்



படிப்பகம்



"தம்பி கிரிக்கெட்டுல
போளரா இருக்கிறாரா?"
"எப்படிக் கண்டு பிடிச்சீங்க"
"போண்டாவை
சாப்பிடறத்துக்கு முன்னால
ரௌசரில் போட்டு இப்படி
தேய்க்கிறாரே"

எதுவும் கடைசில் ஏற்றுக் கொள்ளப்படவோ சட்ட மூலமாக்கப்படவோ இல்லை. இதுவும் ஒரு மாற்றுக் கொள்கை தான்.

இக்கட்டுரையை முடிப்பதற்கு முன் சில சரித்திர வரலாற்றுக்களையும் குறிப்பிடுவது பொருத்தமாகும். இந்தியா சுதந்திரம் பெற்றதும் மகாத்மா காந்தியை ஒருவன் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றான். இதுவும் ஒரு மாற்றுக்கொள்கைதான். இந்திய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் தனது மெய்ப் பாதுகாவலராக தனக்கு மிகவும் நம்பிக்கையான இரு சீக்கியரைத்தான் அருகில் வைத்திருந்தார். ஆயினும் அவர்களில் ஒருவர் தான் அம்மையாரை சுட்டுக்கொன்றான். இதுவும் ஒரு மாற்றுக் கொள்கைதான்.

**எதிர்கட்சி தலைவருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம்**

1978 இல் இலங்கைப் பாராளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவராக தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் அமிர்தலிங்கம் செயற்பட்டபோது, உலகில் எந்த நாட்டிலும் நடைபெறாத ஒரு சம்பவம் நடந்தது. அதாவது சரித்திரத்திலேயே முதன் முதலாக ஒரு எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டு விவாதிக்கப்பட்டு நிறைவேற்றவும் பட்டது. இதுவும் ஒரு மாற்றுக் கொள்கை தான்.

எதிர்கட்சித் தலைவருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம்

www.padippakam.com

1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் அன்றைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனாவும் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியும் செய்து கொண்டனர் . இதைத் தொடர்ந்து நாடு முழுவதும் எதிர்ப்பலை வீசத் தொடங்கியது. அதனால் ஜனாதிபதி ஜயவர்த்தனா தானே நேரில் சில கூட்டங்களுக்குச் சென்று விளக்கம் அளித்தார். அத்தகைய ஒரு குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி ஜயவர்த்தனா தான் ஏன் இந்த ஒப்பந்தத்தைச் செய்ய வேண்டி நேர்ந்தது என்பதை விளக்கிய பின் ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் கேள்வி கேட்கலாம் என்று கூறி அமர்ந்தார். அதற்கு உடனே சிலர் எழும்பி "நான் அதை எதிர்கிறேன்" என்று கூறி விட்டு அமர்ந்து கொண்டனர். சபையின் ஒரு பக்கத்தில் பார்த்து "எங்கே உங்கள் கேள்வி என்ன?" என அமைதியாகக் கேட்டார். உடனே அப்பக்கத்தில் இருந்து ஒருவர் எழுந்து "நான் அதை எதிர்க்கிறேன்" என்று விட்டு அமர்ந்தார். அதற்கு ஜனாதிபதி ஜயவர்த்தனா அப்படிக் கூறியவர் எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொண்டார். அவரும் எழுந்து நின்றார். அப்போது ஜனாதிபதி ஜயவர்த்தனா "நீங்கள் அதற்கு மாற்றுக் கருத்து அல்லது ஆலோசனை எதுவும் வைத்து உள்ளீர்களா?" என அன்பாக வினாவினார். அவரோ "இல்லை" எனச் சட்டெனக் கூறி விட்டார். அவர் பதில் வந்ததும் வராததுமாக ஜனாதிபதி ஜயவர்த்தனா "அப்படியானால் வாயை மூடிக்கொண்டு இரு" என்ற கடுகடுத்தார். இதுவும் ஒரு மாற்றுக் கொள்கைதான்.

> **கடுமையாக உணர்ச்சி வசப்படுபவர்கள் சீக்கிரத்தில் வயதானவர்களைப் போல ஆகிவிடுவார்கள்.**

## 2004 தேர்தல்

இலங்கையில் 2004 ஆம் ஆண்டு சித்திரை மாதம் இரண்டாம் திகதி நடைபெற்ற தேர்தலில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கட்சிகள் போட்டியிட்டன. ஆயினும் இறுதியில் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்ட மக்கள் விடுதலை முன்னணி 105 ஆசனங்களையும் முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உடன் இணைந்து போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி 82 ஆசனங்களையும் ஹெல உருமய எட்டு ஆசனங்களையும் பெற்றன. அதே வேளை வடக்கு கிழக்கில் தமிழ்க் கட்சியாக தமிழர் உரிமைகளை மட்டும் முன்வைத்து தேர்தலில் போட்டியிட்ட தமிழரசுக் கட்சி 22 ஆசனங்களையும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஒரேயொரு ஆசனத்தையும் பெற்றன. இதுவும் ஒரு மாற்றுக் கொள்கைதான்.

அதே வேளை குறிப்பிட்டுள்ள கட்சிகளைத் தவிர்ந்த அனைத்துக் கட்சிகளும் ஒவ்வொரு மாற்றுக்



படிப்பகம்

யாராக இருந்தாலும் கோபப்பட வேண்டிய விடயங்களுக்கு கோபப்படவேண்டும். அப்போதுதான் வாழ்க்கையில் சமுதாய மாற்றங்களை, சீர்திருத்தங்களை ஏற்படுத்த வழிவகுக்கும். கோபம் இருக்கும் இடத்தில் தான் குணம் இருக்கும். உப்பில்லாத உணவு எப்படியோ அப்படியே கோபமில்லாத மனிதப்பிறப்பும் கூட.

கொள்கைகளை முன்வைத்துத் தான் தேர்தலில் பங்கு கொண்டனர். மக்கள் அவர்களின் மாற்றுக் கொள்கைளை நிராகரித்துள்ளனர் என்பது வெள்ளிடை மலை. ஒரே ஒரு பிரதிநிதியைக் கொண்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியை அரசு ஏற்று அமைச்சர் பதவியும் வழங்கி உள்ளது. அதே வேளை தேர்தலில் போட்டியிட்ட வட கிழக்கு மாகாணங்களில் 90 வீதம் வாக்குகளைப் பெற்ற 22 அங்கத்தவர்களையும் பெற்ற தமிழரசுக் கட்சியை ஏன் சுதந்திரக் கட்சி அங்கீகரிக்கவில்லை என்ற கேள்விக்கு சரியான பதில் தர முடியாது உள்ளனர். இதுவும் ஒரு மாற்றுக் கொள்கை தான்.


இச் சந்தர்ப்பத்தில் 1948 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை வட கிழக்கில் தமிழ்க் கட்சிகளும் மற்றைய மாகாணங்களில் சிங்களக் கட்சிகளும்தான் தேர்தலில் போட்டியிட்டு வந்துள்ளனர். இது மறுக்க முடியாத சரித்திர வரலாறு. அதாவது தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வட கிழக்கு மாகாணங்களில் மட்டுமே தமிழ்க் கட்சிகள் போட்டியிட்டதுடன் அங்கு வாழும் தமிழ் மக்களின் சுயாட்சி சுதந்திரம் பற்றிய கொள்கைகளை முன் வைத்தனர்.

1977 ஆம் ஆண்டிலும் இதே கொள்கையில் தான் தமிழரசுக் கட்சியில் போட்டியிட்டு தெரிவு பெற்ற மட்டக்களப்பு பிரதிநிதிகள் இராசதுரையும் தேவநாயகமும் தெரிவு செய்யப்பட்ட பின் ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாவினார்கள். அதுவும் அன்றைய சட்டத்தின் பிரகாரம் கட்சி தாவினால் பாராளுமன்ற அங்கத்தவர் பதவியையும் இராஜனாமாச் செய்ததாக அமையும், பதவியையும் இழந்துவிடுவர் என்றிருந்தது. இவர்கள் இருவரையும் கட்சி மாறும் போது பாராளுமன்ற அங்கத்தவர் பதவியை இழந்துவிடாமல் இருப்பதற்காக அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஒரு விசேட திருத்தத்தைக் கொண்டு வந்தார் அன்றைய ஜனாதிபதி ஜயவர்த்தனா. அதாவது எதிர்க் கட்சியில் இருந்து அரசாங்கக் கட்சிக்கு தாவும் போது பாராளுமன்ற அங்கத்தவர் பதவியை இழக்க வேண்டியதில்லை என்பதாகும் அச் சட்டம். இதுவும் ஒரு மாற்றுக் கொள்கைதான்.

மாற்றுக் கருத்து என்பது ஒரு நல்ல காரியம் என்பதை எவரும் மறுக்கவில்லை. மறுக்கவும் மாட்டார்கள். மறுக்கவும் கூடாது. ஆயினும் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காலம், நேரம், சந்தர்ப்பம், சூழ்நிலை எனப்பல காரணிகளைக் கவனத்திற்கொண்டு தான் மாற்றுக்கருத்துகளை முன்வைக்க வேண்டும். ■

www.padippakam.com

சிறுகதை



# மனைவி

**எம்.எஸ்**

. ஒரு மனுசன் என்று கூட மதிக்கிறாள் இல்லையே. வெளிநாட்டில் நிண்டு உழைச்சு, கொட்டேக்க என்ன பாசம், என்ன அன்பு வைத்திருந்தாள் அதெல்லாம் இப்ப எங்க போச்சு சேகர் யோசித்துக்கொண்டு சார்மனைக் கதிரையில் படுத்திருந்தான்.

சவுதி கொம்பனி ஒன்றில் ஒன்பது வருடங்களாக சாரதியாக வேலை செய்து கொண்டிருக்கும் போது இரண்டு வருடத்திற்கு ஒரு



படிப்பகம்

முறை வந்து போவேன். நான் ஆசைப்படுவது, தான் ஆசைப் படுவது எல்லாவற்றையும் கேட் காமலே சமைத்து போடுவாள். அப்போதெல்லாம் கேட்பாள், "லீவில வந்திட்டு, கூட நாள்கள் நின்று விட்டு போகக்கூடாதா, இப்படி அவசரப்படுகிறீங்க" என்று. நான் சொல்வேன் 'இப்ப இளவ யதில் போதிய அளவு பணம் சேர்த் தால்தான் பின்னுக்கு வயசு போன நேரத்தில் நிம்மதியாக வாழ ஏலும். இப்ப சேமிச்சு வைச்சா பிறகு ஓய்வாய் ஒரு இடத்தில கிடக்க லாம்' என்று.

மகன் கொழும்பில் பலசரக்குக் கடையொன்றில் காசாளராக வேலை செய்கிறான். மகள் யாழ் பல்கலைக் கழகத்தில் படிக்கிறாள். வரவு, செலவு என்றாலும் சரி, வங்கி கொடுக்கல் வாங்கல் என்றாலும் சரி எனது மனை விதான் பார்த்துக்கொள்கிறாள். அவளின் அண்ணன் கனடாவில் இருக்கிறார் அவரும் இடைக்கிடை பணம் அனுப்பி கொள்வார். வெளிநாட்டுச் சொந் தங்களும் அடிக்கடி சொந்த ஊருக்கு வந்து போவார் கள். பண புழக்கத்திற்கு கஷ்டமில்லை. மரக்கறி, தேங்காய், பழங்கள் வீட்டுவள விலேயே கிடைக்கும். குத்தகைக்கு கொடுத்தி ருக்கும் காணி வருமானங்களும் வந்துசேரும்.

எனது மனைவி எதற்கெடுத்தாலும் என்னைத் திட்டிக்கொள்ளாமல் இருக் கமாட்டாள். விடிந்ததிலிருந்து படுக்கபோக மட்டும் ஆயிரத்தெட்டு குறைகளை கண்டு பிடித்து அடுக்கிக் கொண்டே இருப்பாள். தன்ர விருப்பம் போலவே வீட்டு நிர்வாகத் தை கவனித்துக் கொள்வாள். எதுவும் கேட்டால் என்மேல் எரிந்து விழுவாள்.

இப்ப இருக்கிற வீடு அவளின் சீதனக்காணியில் சவுதிக்காசில் கட்டியதுதான். ஆனால் அடிக்கடி சொல்வாள் தான் கஷ்டப்பட்டுக் கட்டின வீடு, தன்ர வீடு என்பாள். சும்மா இருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்குது இந்த மனுசன் என்று புறுபுறுப்பாள்.

எத்தனை காலமாகத்தான் நானும் தாங்கிக் கொண்டிருக் கிறேன். இந்த ஏச்சுக்கும் பேச்சுக் கும் முற்றுப்புள்ளி வைக்க வே ணும். நான் நிம்மதியாக இந்த சார்மனையில் படுத்திருக்க வே ணும். இவளின்ர அகங்காரம், அதட்டல், மிரட்டல் எல்லாவற் றையும் குறைச்சு ஒரு மனிசியாக்க வேணும்.

அடுத்த ஒழுங்கையில் சாத் திரியார் ஒருவர் இருக்கிறார். அவர் மந்திரிச்சு நூல் தந்தாரென்றால் நல்ல விசேஷம் என்று ஊருக்குள் கதைப்பார்கள். இவளுக்கும் ஒரு

**"எனது மனைவி எவ்வளவோ மேல். பூப்போட்டு கும்பிட வேணும். தப்பு ஒன்று பண்ண நினைத்தேனே. நல்லவேளை கடவுள் காப்பாற்றினார்."- மனம் நொந்து கொண்டேன.**

www.padippakam.com



"திருடப்போன இடத்தில ஏன் "குய்யோ முய்யோ"ன்னு கத்தினாய்...?"
"இப்படி வீட்டில எல்லோரும் கையில கத்தி, பொல்லை வைச்சுக்கொண்டு முழிச்சுக் கொண்டு இருப்பாங்கெண்டு நான் கண்டேனா?"

நூலை வாங்கி கட்டிவிட்டேன் என்றால் அடங்கி அமைதியாகி விடுவாள். அடுத்த நாள் காலையில் சாத்திரியார் வீட்டுக்குச் சென்றேன்.

வீட்டுக்கு முன்னால் கொஞ்சம் சனமாக இருந்தது. சாத்திரம் கேட்க இன்று நல்ல சனம் வந்திருக்கு, எப்படியும் மத்தியானம் ஆகிவிடும் போல இருக்கு என்று எண்ணியபடி உள்ளே சென்றேன். சாத்திரியாரின் மனைவி தலைவிரி கோலத்துடன் நின்று கணவனை தகாத வார்த்தைகளால் திட்டித்தீர்த்துக் கொண்டு நிற்கிறாள். வீட்டுச் சாமான்களைத் தூக்கி அவருக்கு எறிகிறாள். அவளை ஒருவாறு பக்கத்து வீட்டுப் பெண்கள் பிடித்தார்கள். சாத்திரியார் கண் கலங்கியபடி என்ன செய்வதென்று தெரியாது நிற்கிறார். நானும் கண்கலங்கியபடி வீட்டுக்குத் திரும்பி நடக்கிறேன்.

"எனது மனைவி எவ்வளவோ மேல். பூப்போட்டு கும்பிட வேணும். தப்பு ஒன்று பண்ண நினைத்தேனே. நல்லவேளை கடவுள் காப்பாற்றினார்."- மனம் நொந்துகொண்டேன்.

இனியும் அவளை தனிய கஷ்டப்படவிடக்கூடாது. அவளுக்கு வீடு, தோட்டம், எந்த வேலைகளானாலும் ஒத்தாசையாக இருக்கவேணும் வீட்டுப்பொறுப்பையும் பகிர்ந்து கொள்ள வேணும் என்று தீர்மானத்துடன் ஒரு புதுமனிதனாக வீட்டை அடைந்தேன். ■



படிப்பகம்

(18 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

வொருவரும் சிந்தித்தால் கட்டாயம் வாழ்க்கையில் முன்னேற முடியும். அதற்கு அவர்களின் பெற்றோர்களும் துணையாக இருக்க வேண்டும். எனது பெற்றோர்கள் இதற்கு எந்த விதத்திலும் தடையாக இருக்கவில்லை. எனது எல்லா முயற்சிகளுக்கும் துணையாகவே இருந்தார்கள்.

"அகதிமுகாமில் வாழும் மக்களே! நீங்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று மனம் வைத்து செயற்பட்டால் நிச்சயம் முடியும். மனிதனால் முடியாதது என எதுவும் இல்லை." உங்களின் வாழ்க்கைக்கு தடைக்கல்லாக நீங்களே இருக்கிறீர்கள் என்பதை உணர்ந்து செயற்படுங்கள். உங்கள் முன்னேற்றப்படிகளில் எத்தனையெல்லாம் இழந்திருப்பீர்கள்? அதையெல்லாம் கனவாக நினைத்து புதிய வாழ்க்கையை ஆரம்பியுங்கள். ■

# மண்ணெண்ணை அடுப்பு

## உபயோகப்படுத்தும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்:

1. நல்ல தரமான அடுப்புகளை மட்டுமே உபயோகிக்க வேண்டும்.

2. தினசரி அடுப்பைத் துடைத்து சுத்தம் செய்ய வேண்டும்.

3. அடுப்பு ஏற்றுவதற்கு முன்னரே எண்ணை விட வேண்டும். எரிந்து கொண்டிருக்கும் போது எண்ணை விடக்கூடாது.

4. எரிந்து கொண்டிருக்கும் அடுப்பை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு மாற்றக்கூடாது.

5. எண்ணெய் கசிவு இருக்கும் அடுப்பை பயன்படுத்தக் கூடாது.

6. தண்ணீர், கறிகள் கொதித்து அடுப்பில் விழாமல் இருக்கவேண்டும். விழுந்தால் உடனே துடைக்க வேண்டும்.

7. தீ நீல நிறமாக இருக்கவேண்டும். தீ சிவப்பு நிறமாக இருந்தால் கத்திரியினால் திரிகளின் மேல் முனையை வெட்டி ஒழுங்காக்க வேண்டும்.

8. அடுப்பை அணைக்கும் போது முகத்தை நேரே வைத்து ஊதி அணைக்க கூடாது.

9. அடுப்பு முழுவதும் தீப்பற்றினால் தண்ணீர் ஊற்றக்கூடாது. தீயை அணைப்பதற்கு ஒரு பெரிய பாத்திரத்தினால் அல்லது கனமான துணியினால் காற்று உள்ளே புகாதவாறு அடுப்பை மூடினால் போதும்.

www.padippakam.com

# என் மன வானில்



அழகேந்திரன்

இலங்கை அன்னையில் சென்னியாய் இலங்கிடும் எங்கள் ஊரின் வாசனைகள் சொல்ல தமிழின் வார்த்தைகள் போதுமா? பல ஊர்கள் பறந்து திரிந்த "இந்தக் கருங்காகம்" கூட பிறந்த மண் என்றதும் கானக்குயிலாய் மாறி விடுவது அதிசயந்தான்.

வீரத்தமிழ் மன்னர்கள் பலர் தலைநகராய் கொண்டு அறமோங்க செங்கோலாச்சிய வீர பூமி; ஆண்டாண்டு காலமாய் சரித்திர போர்களை தன்னுள் தாங்கிக் கொண்ட சகாப்த பூமி; புண்பட்டுப் போனாலும் வளமான மண் கொண்டு புன்னகையே பூத்த பூமி; அகன்ற சாலையோரத்து மரங்கள் சாமரம் வீசும் பச்சை வயல்களும் பழமரத் தோட்டங்களும் கவி பல சொல்லும்.

வயல் மேடு தழுவி வரும் வாசத் தென்றலின் சுகம்; நீர்த்துளி பட்டதும் நீண்டெழும்பும் மண் புழுதி வாசம்; இன்று நினைத்தாலும் என் மூக்கின் நுனி வியர்க்கத்தான் செய்கிறது. அந்த ஈரமும் வாசமும் என்னுள் ஏற்படுத்திய கிளர்ச்சிகள் பல. வானம் பார்த்த



படிப்பகம்



வயல் மேடு
தழுவி வரும்
வாசத் தென்றலின்
சுகமர்த்துளி
பட்டதும்
நீண்டெழும்பும்
மண் புழுதி வாசம்
இன்று நினைத்
தாலும் என்
மூக்கின் நுனி
வியர்க் கத்தான்
செய்கிறது.

வறண்ட பூமியாய் பேருந்துகளை எதிர்பார்த்து இருக்கும் தரிப்பிடங்கள் இன்றும் இவை அனாதைகளாய் இருப்பதைத் தான் பொறுக்க முடிய வில்லை.

சைக்கிள் றிம்மும், கையில் கோலும் கொண்டு ஓடி ஆடித் திரிந்த எங்கள் ஒழுங்கையின் நீள அகலப் பரிமாணம் ஞாபக நிழல் களாய் மறையாமலே இருக் கின்றன. பாதுகாப்பு பங்கருக்குள் மண்சோறு சமைப்பும், வேலி யோரத்து கதியால்களோடு உரை யாடியதும், படலையை மேடையாக நினைத்து பாட எண்ணி குழந்தைப் புலம்ப

விடுவதும் இரும்படிந்த ஞாபகங்கள் தான். எனக்கென்று ஒரு ஆடு, ஆடு மேய்க்க புல்வெளி; புல்லோடு சேர்ந்து கீரையும் பிடுங்கும் சிறுபிள்ளைத்தனம். மறக்க முடியாத நினைவுகள். மூன்றாம் வகுப்பில் என் உயிர் நண்பனை கிணற்றுக்கு பலி கொடுத்துவிட்டு வீண்பழி சுமந்து கொண்டு கண்ணீர் விட்டதும் அந்த அடர்த்தியில் இன்றும் என் இதயம் கனப்பதும் சோக நிகழ்வுகள்.

"றகீம்" ஆம், அதுதான்!! அது எங்கள் வீட்டு நாயின்.. அல்ல நன்றியுள்ள ஜீவனின் பெயர். ஐந்தறிவு ஜீவராசியா? அது சொல்லவே முடியாது, இல்லையென்றால் நான் சொல்வது நிஜமாகி விடாதே.

பாடல் கேட்பது அதற்கு மிகவும் பிடிக்கும். வானொலியை நிறுத்திவிட்டால் எங்களை துரத்திக்கொண்டல்லவா வரும். வீட்டிற்கு வருபவர்கள் வெறுங்கையுடன் வரமுடியாது. வெள்ளிக்கிழமைகளில் மாமிசத்தை திரும்பியும் பாராது. முதலில் குளித்த பின்பு தான் உணவை நெருங்கும்.

ஒரு முறை நாங்கள் தற்காலிகமாக இடம்பெயர்ந்து சென்ற போது எங்களைக் காணாது தேடி அலைந்து இறுதியில் எமது வீட்டு வாசலிலேயே உண்ணாவிரதம் இருந்தது. நாம் வரும் போது குற்றுயிரும் கண்ணீருமாய் இருந்த அந்த ஜீவாத்மா எம்மை ஒருமுறை வலம் வந்து பூமியிலே விழுந்தது. ஆஹா! அதன் பாசஉணர்வை நன்றியை எப்படிச் சொல்வது? ஒரு மனிதனுக்குரிய மரியாதையுடன் அடக்கம் செய்தோம். அயல்வீட்டார் கூட அன்று கண்ணீர் சிந்தியது என் மனதில் மங்கலாகத் தெரிகிறது. அந்த ஜீவராசி தான் இப்போதும் என் வாழ்க்கை வழி காட்டி.

இந்த தேகம் வாழ்ந்த தேசவாசனையின் இரத்தினச்சுருக்கம் தான் இன்று என் மன வானில் உதயமாகியது. இங்கே முழு நிஜமும் சொல்லப்படாதது நிஜந்தான். ஆனால் சொல்லப்பட்டயாவும் நிஜந் தான். ■


**சைக்கிள் றிம்மும், கையில் கோலும் கொண்டு ஓடி ஆடித் திரிந்த எங்கள் ஒழுங்கையின் நீள அகல பரிமாணம் ஞாபக நிழல்களாய் மறையாமலே இருக்கின்றன.**


**உங்கள் பசுமையான நினைவுகளை மீட்டுப்பார்ப்பதில் சுகம் உண்டு. அந்த சுகத்தில் கிடைக்கும் வாசத்தை எல்லோரும் முகர்ந்திட என்மன வானில் பகுதிக்கு விரிவாக எழுதி அனுப்புங்கள்.**

"என்மன வானில்"
160, THELANKAPATHA ROAD,
WATTALA, SRI LANKA.


www.padippakam.com

# நீங்கள் எப்படிப்பட்டவர்?



**A –** இது ஜீவசக்தியையும் எல்லா அண்டங்களிலும் பரவி நிற்கும் பரம் பொருளின் சக்தியையும் ஒருங்கே குறிக்கிறது. இவ்வெழுத்துக்கு அற்புதமான சக்திகள் உண்டு. மிக மேலான நிலைக்கு உயர்த்திச் செல்லும். கீழ் நிலைக்கு இறங்கும் போது தடுத்து நிறுத்தும். ஒன்று சேர்க்கிற சுபாவமே தவிர அழிக்கிற சுபாவமில்லை. பெயரின் முதல் எழுத்தாக வந்தால் பெயருடையவர் ரோசமுள்ளவராக இருப்பார். தாரளமான சுபாவமிருக்கும். புதுப்புது யோசனைகள் மனதில் உதிக்கும். நல்ல நிர்வாக திறமை இருக்கும். மேன்மையான

## பெயரின் முதல் எழுத்துக்குள் பொதிந்திருக்கும் குணநலன்கள்




வராக இருந்தாலும் சரி, கீழ்த்தரமான மனப்பான்மை உடையவாயினும் சரி இந்த எழுத்தை பெயரின் ஆரம்பத்தில் உடையவர் மிதமிஞ்சின மூளைப்பலம் உடையவாக விளங்குவார். இவ்வெழுத்தின் வர்ணம் இலேசான மஞ்சளாகும்.

**B –** இந்தச் சத்தத்திற்கு ஆழ்ந்த ஊதா நிற ஒளி உண்டு. ஆத்ம சக்தியின் இருப்பிடம். நன்மைகளின் வாசஸ்தலம். வெளியிடுவதைக் காட்டிலும் அதிகமான எண்ணங்களும் உணர்ச்சிகளும் உள்ளே இருக்கும். அதனால் சில


படிப்பகம்

சமயங்களில் மனதில் உள்ளதை அப்படியே சொல்ல முடியவில்லையே என்று துக்கப்படுவார்கள். ஆத்மீக வாழ்க்கையில் மிகுந்த பற்றுதல் இருக்கும். நேரான முறையிலேயே எதையும் சாதிக்க முயல்வார்கள். சாமாதான பிரியர். சக்திகளையும் பொருட்களையும் வீணாக்காமல் உபயோகப்படுத்துவார்கள். மேன்மைக் குணங்கள் பொருந்தாவிடத்து சண்டைக்காரராயும் மித்ர பேதம் செய்பவராயும் ஆவார்கள்.




**C** – வன்மையையும், ஆண்மை யையும் குறிக்கிறது. படைக்கும் சக்தியையும் ஆளக்கூடிய பலத்தையும் உண்டாக்கும். எத்தொழில் புரிந்தாலும் மேன்மையையும் அசாத்தியமான சாதனைகளையும் மேதாவித் தனத்தையும் குறிக்கிறது. இச்சத்தம் படபடப்பானதும் வேகமானதுமான அலைகளைக் கொண்டது. மூளை, வாய் ஜனனேந்திரங்கள் மூலமாக சக்தி வெளியேறத்துடிக்கும். பிறர் சோம்பேறிகளாகவோ மிக வேகம் குன்றியவர்களாக இருந்தால் இவர்களால் பொறுக்க முடியாது. கைகளினாலோ அல்லது சரீரத்தினாலோ வேலை செய்து பிழைப்பதை வெறுப்பார்கள். முன்னேறுவதில் தீவிர ஆர்வம் இருக்கும். மேன்மையான இலட்சியங்களை அமைத்துக் கொண்டு வாழ வேண் டியது அவசியம். அப்படிச் செய்யாவிடில் பிறர் இவர்களைக் கொடுமையானவரென்று கூற நேரும். கலைகளிலும் சாஸ்திரங்களிலும் தீவிர ஆர்வமிருக்கும். எக்காரியம் செய்த போதிலும் முடிவை அறியத் துடிப்பார்கள். செயலாற்றும் திறன்



www.padippakam.com



மிகுந்தவர். சக்தியை சிதற டிப்பார்கள். சுகானுபவங்க ளில் நிதானம் தேவை. இது சிகப்பு, ஓரேஞ், ஊதா வர்ணங்களின் சேர்க்கை யைக் குறிக்கிறது.

**D** – இது நேர்மையான நடத்தை, துணிகரமான செயல், தீர்மானமான அபிப் பிராயம், சலியாத உழைப்பு, பாதகமான சூழ்நிலைகளை யும் லட்சியம் செய்யாமல் உழைத்து வெற்றி காணல், இவைகளைக் குறிக்கிறது. இச்சத்தம் வயிறு சுவாச பகுதிகளை பாதிக்கும். ஆழ்ந் த நீல வர்ண அலைகளால் குறிக்கப்படுகிறது.



**E** – இவ்வெழுத்து ஆராய்ந்து விஷயங்களைச் சீர்துாக்கிப் பார்த்து முடிவுக்கு வருவ தைக்குறிக்கும். பல அரிய யோசனைகளும் முடி வுகளும் திடீரென மனதில் தோன்றும் அதைப் பின்பற்று வார்கள் இது ஆழ்ந்த மாயா சக்தியின் விளையாட்டைக் குறிப்பதால் சுலபமாக யாவரும் வசமாவர். வேதாந்தம், யோகம் இவைகளில் பற்று ஏற்படும். பொதுஜன அபிப்பி ராயத்திற்குப் பயப்படுவார்கள். இரகசியத்தை விரும்புவர். மனதில் பயந்தாலும் வெளிப்படுத்தாமல் அமைதியாக இருப்பார். சதா ஏதாவதொன்றை அடைய முயன்ற வண்ணமிருப்பர். ஆபத்து வந்தால் மிக்க நிதானமாக நடந்து கொள்வர். பிறருக்கு உதவ விருப்பமிருக்கும். இவர்க ளுக்கு உற்சாக மேற்பட்டால் மற்றவர் களையும் உற்சாகப்ப டுத்துவர் இவர்களுக்கு சோர்வு ஏற்பட்டால் பிற ரையும் அதைரியப்படுத்துவர். அபிப்பிராயங்கள் மாறும்.

படிப்பகம்

www.padippakam.com



**F** - இவ்வெழுத்து பெயரில் வந்தரல் துணிந்து தாக்கும் சுபாவம் உண்டாகும். தன் காரியத்தையே சாதிக்கவும், தன் அபிப்பிராயங்களையே பிறர் மீது திணிக்கவும் திறமை ஏற்படும். விடாப்பிடிவாதமும் நிர்வாகத் திறமையும் ஏற்படும் நண்பர்களிடம் நீங்காத விசுவாசம் கொண்டவரா வர். நிச்சயமான அபிப்பிராயங்களே உடையவர்கள். அதிகம் பேசாமல் காரியத்திலேயே கண்ணாயிருப்பார்கள். தோல்வி நேர்ந்தால் உடனே தான் தோற்ற கவில்லையென்று காட்டிக் கொண்டு விடுவார்கள். வெற்றியின் மாறாத நம்பிக் கையுடைய இவர்களுக்குச் சரீர பலமும், மனோ பல மும் உணர்ச்சிகளும் ஒருக் காலும் குறையாது. திடகாத்திரராய் நீடித்து வாழ்வார்கள்.

**G** - இவ்வெழுத்தால் குறிக்கப்படுகிறவர் தானே எல்லா தியாகங்களுக்கும் சோதனைகளுக்கும் உட்படுவர். மிதமிஞ்சின தன்னம்பிக்கையும் எதையும் தாங்கிக் கொள்ளும் சக்தியும் உண்டு புதிதான விஷயங்களைக் கண்டு பிடிப்பார்கள். திட்டமிட்டுக் காரியம் செய்வார்கள். தீர்க்கதரிசி போல் முடிவை ஆரம்பத்திலிருந்தே சரியாக நோக்குவார்கள். சத்தியம், அன்பு மிகும். பொறுமையும் வியக்கும்படியாக இருக்கும். நோய்வாய்படினும் சீக்கிரமே குணமாகி விடுவர். மேன்மையாக இல்லாவிடில் இது ஏமாற்றுகிறவர்களையும், சோம்பேறிகளையும் குறிக்கும்.



**(அடுத்த இதழிலும் தொடரும்)**



படிப்பகம்

www.padippakam.com

# தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் கதை

இலங்கையிலிருந்து தமிழ் நாடு சென்ற தமிழ் அகதிகள் ஒரு பாதுகாப்பான புகலிடமாகவே தமிழ் நாட்டைக் கருதி வந்திருக்கிறார்கள். தங்களுடையதும் தங்கள் குடும்பத்தினருடையதும் உயிர்களுக்கு அஞ்சி ஓடிய ஆயிரமாயிரம் அகதிகளுக்கு தமிழ் நாட்டின் மொழி, பண்பாடு, சமயம் முதலானவை. "ஊருக்கு வெளியே ஊராக" அமைந்திருந்தது.

பல இலங்கைத் தமிழ் மக்கள் தமிழ் நாட்டிலே சிறிய வியாபாரங்களைத் தொடங்கி வீடு வாங்கி, நல்லபடியாக அங்கே குடியமர்ந்து இருக்கிறார்கள். ஆனால் பலருக்கு அந்த அதிர்ஷ்டம் கிடைக்கவில்லை.

மன்னார் தீவின் கரையோரத்தில் வாழ்ந்த தமிழ் மக்களில் ஏறத்தாள இருபதாயிரம் பேர், 1985 முற்பகுதியில், தங்கள் பகுதியில் இராணுவம் நடத்திய ஒடுக்குமுறைக்கு அஞ்சி, படகுகளில் ஏறிப் புலம்பெயர்ந்தார்கள். வியட்னாமிய "படகு அகதிகளுக்கு" சமமான தமிழ் மக்களின் படகு அகதிக் கோலம் இது.

அனாதரவான, துயர் தோய்ந்த இத்தனை பெருந்தொகைத் தமிழ் அகதிகள் திடீரென்று தமிழ் நாட்டுக் கிழக்குக் கரைகளிலே போய் இறங்கிய போது, இத்தகைய பாரிய மனித அவலத்தை எதிர் கொள்ள தமிழ் நாடு அதிகாரிகள் ஆயத்தம் எதுவும் இல்லாது, வழி தெரியாது திகைத்தார்கள்.

உள்ளூர்வாசிகள் சூறாவளியால் பாதிக்கப்பட்ட போது காற்று மழையில் இருந்து காப்பாற்றித் தற்காலிகமாகக் குடியேறும் வட்ட வடிவிலான கட்டடங்கள் கடற்கரை நீளம் இருந்தன. மன்னாரில் இருந்து வந்த தமிழ் அகதிகளுக்கு அணவயே வீடுகளாயின.

உள்ளே அறைகள் இல்லாத வட்ட வடிவக் கட்டடங்களே இந்தச் சூறாவளிக் காப்பகங்கள். தமிழ்நாடு கிழக்குக் கரை நீளம் இவை நிறுவப்பட்டு இருக்கின்றன. கரையோரப் பகுதிகளில் சூறாவளிக் காற்று சீறி அடிக்கும் போது சுற்றிவர உள்ள கிராமத்தவர்களுக்குக் காப்பிடமாக அமையும் வண்ணம் இவை நிறுவப்பட்டு இருந்திருக்கின்றன. ஆனால் அவை அவசரகாலத் தரிப்பிடங்களாக இருக்கவே பொருந்தும். அகதிகளை நிரந்தரமாகத் தங்க வைக்க அவை போதுமானவை அல்ல.

இலங்கையில் இருந்து இடம் பெயர்ந்து சென்று

www.padippakam.com

**செல்போனை இடுப்பில் வைத்திருந்தால் ஆண்மைக் குறைவு ஏற்பட வாய்ப்பிருப்பதாகச் சொல்கிறார்கள் ஸ்வீடன் நாட்டுப் பல்கலைக்கழக ஆராச்சியாளர்கள்.**

இந்தத் துணிச் சுவர்களுக்கு உள்ளே ஐந்து, ஆறு, ஏழு, எட்டுப்பேர் இனி முதியவர்கள், புதிதாக திருமணமானவர்கள், பிறந்த குழந்தை இப்படி குடும்பத்தினர் வாழத் துடித்துக் கொண்டிருந்தார்கள். மண்ணெண்ணெய் அடுப்பிலிருந்தும் விறகு அடுப்பிலிருந்தும் புகையும், தீச்சுவா லையும் அந்த இடத்தை ஆபத்தா னதாக உடல் நலக் கேடானதாக ஆக்கியிருந்தது.

மக்களோடு உரையாடி இடத்தைச் சுற்றிப்பார்க்க முற்பட்டதும் அங்கே இருப்பவர்களுக்குப் போது

சொல்லோனா துன்பங்களை அனு பவிக்கும் இந்த மக்கள் குறித்து "புலிகளின் குரலுக்கு" கட்டுரை எழுதும் பொருட்டு தமிழ்நாடு கோவளத்துக்கு செய்ற திருமதி அடேல் பாலசிங்கம் தமிழர் புனர்வாழ்வு கழகம் உருவான சூழ்நிலையை பின்வருமாறு விபரிக்கிறார்.

"அந்தக்கட்டடம் ஒன்றுக்குள் நுழைந்த போது எனது இதயம் உறைந்து போனது. எங்கும் கூட்டம் கூட்டமாக ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. அறைகள் இல்லாத அந்தப் பெருங் கூடத்துக்குள்ளே குறுக்கு மறுக்காக கந்தல்களும் பல வண்ணச் சேலைகளும் கட்டப்பட்டிருந்தன.

மனித வாழ்வின் விசித்திரமே இதுதான். கூட்டாக வாழுமாறு சூழ்நிலை மக்களைப் பொது இடத்தில் தள்ளியபோதும் மக்கள் தங்கள் அடிப்படை சமூக அலகை, அதாவது குடும்பத்தை நாடவே முற்படுகிறார்கள்.

தனிமை காக்க வேண்டும் என்ற பிடிவாதத்தோடு ஒவ்வொரு குடும்பமும் சில அடி நீளம் சில அடி அகலமானதாக இருந்தாலும், தனக்கென ஒரு சிறு பகுதியைப் பிரித்து முடிச்சுப் போட்ட சேலைகளால் வேலிகளாகவும் மேலிருந்து தொங்கும் சேலைகளால் சுவர்களாகவும் அடைத்து, மற்றவர்களிடமிருந்து தன்னை வேறுபடுத்தியிருந்தது.

**சிங்கள பேரின வாதிகளினால் கீழ்தரமாக சர்ச்சை கிளப்பப்படும் தமிழர் புனர்வாழ்வு கழகம் குறித்து ஒரு வரலாற்று பார்வை.**



படிப்பகம்

www.padippakam.com

மான உணவு கிடைக்கவில்லை என்று கண்டு கொண்டேன். குழந்தைகள், உப்பிய வயிறோடு, எலும்பும் தோலுமான கை காலோடு செம்பட்டை பற்றிய கருங் கூந்தலோடு எங்கும் காணப் பட்டார்கள். அதுவே பொது நிய தியாக இருந்தது. காரணம் பாலோ, பால் மாவோ அங்கு கிடைப்பது அரிது. பால் இல்லாத தேநீரில் சிறிது சீனி கலந்து அல்லது சோறு வடித்த கஞ்சியையே தாய்மார் பாலகர்களுக்கு ஊட்டினார்கள். இருமல், தடிமல், ஒழுகும் நாசி, காய்ச்சல், சொறி, வயிற்றோட்டம் ஆகியவை உடல் நலப் பிரச்சி னைகளாக இருந்தன. ஆனால் அங்கே மருந்து இருக்கவில்லை.

இந்த மனித அவலத்தைப் பார்க் கும் போது குற்ற உணர்வும் ஆற்றா மையும் பற்றிக் கொண்டன. நானும் அவர்களோடு ஒருவாராக இல்லையே என்ற குற்றவுணர்வு. அவர்களுக்கு கொடுக்க என்னிடம் எதுவும் இல்லையே என்ற ஆற் றாமை உணர்வு.

இவ்வளவு வறுமைக்கும் துயரத்துக்கும் மத்தியில் கூட இந்த மக்கள் எப்படித் தமது மனிதத்து வத்தைப் பேணுகிறார்கள் என் பதும், தங்கள் கண்ணியத்தையும் மரியாதை காட்டும் பண்பையும் காப்பாற்றுவதில் எவ்வளவு கருத் தாக இருக்கிறார்கள் என்பதும் மலைக்க வைத்திருக்கிறது.

இந்த தடவை பொருட்தட்டுப் பாட்டையே எங்கும் காண முடிந் தது என்றாலும். தமிழ் விருந் தோம்பலும், தாராள மனப்பான் மையும் அவர்களிடமிருந்து பீரிட்டு

"ப்ருக்டோஸ்" என்று ஒரு செயற்கை சர்க்கரை கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. இது பழங்களிலிருந்து எடுக்கப்பட்டபொருள் ஆதலால் இதைப் பயன்படுத்துவதால் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு உயராது.

வெளியே வந்தன. சீனித் தட்டுப் பாடு நிலவிய போதிலும் தித்திப் பான தேநீரோடு உபசரித்தார்கள். யாரோ அன்று தமது பங்கை எமக்கு மனம் உவந்து கொடை புரிந்து விட்டு தாம் வயிறு காய்ந்து இருப்பார்.

இந்த மனித அவலத்தை ஓர் கட்டுரை வடிவிலே செய்தித் தாளுக்கு எழுதுவது எனக்கு வெகு இலகுவாக இருந்தது. ஆனால் மனதை உருக வைத்த அந்த அவ லக் காட்சிகளை நெஞ்சில் இருந்து நீக்குவது இலகுவாக இருக்க வில்லை. ஏனென்றால் மிக மோசமான நிலையிலேயே அந்த மக்கள் அங்கே வாழ்ந்து கொண்டிருந்



படிப்பகம்

www.padippakam.com

ஒருவர்: அந்த கப்பல் எங்க சொந்தக்காரருடையது.

மற்றவர்: அப்போ ரிலேஷன் SHIPன்னு சொல்லுங்க.

தார்கள். பச்சைப் பாலகரில் கண்ட நோய் அறிகுறிகள் கவலை அளித்தன. நாம் எந்த மக்களுக்காக போராடுகிறோமோ அவர்களில் இந்த அகதிகளும் ஒரு பகுதியே. ஆகவே இந்தப் பிரச்சினையை ஒதுக்கி விட்டு அப்பால் நகர எனக்கு இயலவில்லை.

ஒரு விடுதலை இயக்கமானது, அரசியல் இராணுவ முனைகளில் நின்று போராட்டம் நடத்துவது போல, தான் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் நலன்கள் மீதும் அக்கறை எடுக்கவும் கடமைப்பட்டிருக்கின்றது.

இயக்கத்தின் செலவுகளை நிர்வகிக்கும் போது நுணுக்கமாகக் கணக்குப் பார்த்துத்தான் பிரபாகரன் செலவைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பது எனக்குத் தெரியும். ஆனால் எனக்காக 5000 ரூபா சிறு தொகையை ஒதுக்கித்தர அவர் மறுக்க மாட்டார் என்பதும் எனக்குத் தெரியும். அவர் எங்களைப்பார்க்க வந்தபோது பிரச்சினையை அவரிடம் எடுத்துக் கூறினேன். இந்த ஒரு முகாமிற்காவது சில உணவுப் பொருட்களும் மருந்தும் வாங்க நிதி வழங்குமாறு கேட்டேன். அவர் உடனடியாக சம்மதித்தார்.

மட்டக்களப்புச் சிறையிலிருந்து தப்பி வந்த மருத்துவர் ஜெயகுலராஜா, அகதி முகாம்களுக்கு என்னோடு கூடி வந்து நோய்வாய்ப்பட்ட குழந்தைகளைப் பரிசோதிக்க உற்சாகமாக ஒப்புக்கொண்டார்.

நிதிகள் சேர்ந்தன, நன்கொடைகள் திரண்டன, வேலை பெருகியது. எங்கள் குழு தமிழ்நாடு முழுவதும் உள்ள அகதி முகாம்களைத் தரிசித்தது. இறுதியில் எமது பணியை ஓர் அமைப்புக்கான யாப்பை கணவர் அன்ரன் பாலசிங்கம் எழுதினார். எமது பணி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்ற பெயரில் அறக்கொடை அமைப்பாகப் பதிவாகியது. தமிழ் நாட்டில் உள்ள ஆயிரமாயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு உதவி புரிவதே கழகத்தின் நோக்கம் ஆகியது.

மருத்துவர் ஜெயகுலராஜா கழகத்தின் தீவிர தொண்டர் ஆனார். காலம் செல்ல நிர்வாகம். திட்டமிடல், திட்ட நடைமுறை ஆகியவற்றின் பொறுப்புகள் மற்றவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இப்பொழுது தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒரு வலுவான அமைப்பாக வளர்ந்து விட்டது. தனித்து இயங்கும் அறக்கொடை அமைப்பாகச் செயற்படுகிறது. ■

இன்று நான் வாழ்ந்து விட்டேன். நாளை ஒரு பொருட்டல்ல என்று நிறைவுடன் சொல்லக்கூடியவன்தான் அருமையான மனிதன்.



படிப்பகம்

www.padippakam.com

# ஒவ்வொருவருக்குள்ளும் திறமை உண்டு!

அன்புள்ள மாணவ மாணவியரே!

பாடசாலை வாழ்க்கையில் பரீட்சை என்பது நீங்கள் கற்ற பாடங்களையும் உங்கள் கல்வி அறிவையும் சோதிக்கும் வழி ஒன்று. அதில் உங்கள் திறமைகளை முழுமையாக வெளிகாட்டுங்கள். அதற்காக எந்தவித அச்சமும் உங்களுக்குள் இருக்கக்கூடாது.

சென்ற மாதம் சாதாரணதரப்பரீட்சை பெறுபேறுகள் வெளிவந்தது. அந்த பரீட்சையில் சித்தி அடைந்தவர்கள் பலர். புள்ளிகள் குறைவாக எடுத்து பரீட்சையில் சித்தியடையாதவர்கள் மனம்தளராமல் மீண்டும் முயற்சிசெய்து பார்ப்பதில் எந்தத்தவறும் இல்லை.

நீங்கள் வாழ்க்கையில் முன்னேற பல நல்லவழிகள் உண்டு. உங்கள் திறமைக்கு ஏற்ற ஒரு நல்ல வழியை தேர்தெடுத்து அதன் மூலமாக உங்கள் வாழ்க்கையை வளமாக்கிக்கொள்ளுங்கள். இறைவனால் படைக்கப்பட்ட ஒவ்வொருவருக்குள்ளும் ஏதோ ஒரு திறமை ஒழிந்து இருக்கும் அதை தேடி அதன் மூலமாக வாழ்க்கையில் முன்னேற வழிவகுத்துக்கொள்ளுங்கள்.

நன்றிகள்.....

*காயத்ரீ அக்கா*

**உங்கள் சுயஆக்கங்கள் வரவேண்டிய முகவரி**

"மாணவகம்"
160, THELANKAPATHA ROAD,
WATTALA.

படிப்பகம்

www.padippakam.com

# விசித்திரமான மிருகம் கங்காரு





கங்காரு தனது குட்டி கங்காருவை கீழ்வயிற்றுப் பகுதியில் உள்ள சிறுபைக்குள் வைத்து பாசத்துடன் பாதுகாக்கிறது. கங்காரு வேறு மிருகங்களிடம் இருந்து தனது குட்டிக்கு வரும் ஆபத்தில் இருந்து காப்பாற்றவும் தான் செல்லும் இடங்களுக்கு பாதுகாப்பாக குட்டியை காவிச் செல்லவும், காலநிலை மாற்றங்களில் வருந்தாமல் இருக்கவும் அந்தப்பையை பயன்படுத்துகிறது.

கங்காரு முதலில் தனது முளங்கால்களை மடித்து குட்டி கங்காருவை தனது வயிற்றின் கீழ் பகுதியில் காணப்படும் சிறு பைக்குள் ஏறச்செய்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# வயிற்றுக்குள் குட்டிக்கரணம் அடிக்கும் குட்டிக்கங்காரு



குட்டிக்கங்காரு பைக்குள் சென்றதும் குட்டிக்கரணம் அடித்து முகப்பகுதி வெளியில் தெரியும் மாதிரி திரும்பி இருக்கும். தனது குட்டியை சிறு பைக்குள் வைத்திருக்கும் சிறப்பு கங்காருக்கு மட்டும்தான் உண்டு.

படிப்பகம்

www.padippakam.com

# வர்ணம் தீட்டி பரிசைபெறுங்கள்.



மேலே காணப்படும் படத்திற்கு திறமையாகவும் அழகாகவும் வர்ணம் தீட்டி அனுப்புங்கள். அதிஷ்டசாலிக்கு பாடசாலை பொருள்கள் அனுப்பி வைக்கப்படும். அனுப்ப வேண்டிய முகவரி:

**"மாணவகம்" 160, THELANKAPATHA ROAD, WATTALA.**

சென்ற இதழில் பிரசுரமான படத்திற்கு அழகாக வர்ணம் தீட்டி அனுப்பி பரிசுபெற்ற மாணவியின் பெயர், விலாசம் பின்வருமாறு.

L.P. KIRTHANA
53/19, SRI PRIYADARSHANA MAWATHA, COLOMBO - 10.




படிப்பகம்

www.padippakam.com

# சொற்களின்

| தவறு | சரி |
|---|---|
| கோர்வை | கோவை |
| தேர்வை | தேவை |
| காரும் | காவும் |
| முயற்சித்தல் | முயலுதல் |
| புஸ்பம் | புஷ்பம் |
| விஷேசம் | விசேஷம் |
| நட்சேந்திரம் | நட்சத்திரம் |
| கல்கண்டு | கற்கண்டு |
| அடைவுகடை | அடவுகடை |
| புடைவை | புடவை |
| சித்தரி | சித்திரி |
| உடைமை | உடமை |
| ஆராட்சி | ஆராய்ச்சி |
| நிர்மானம் | நிர்மாணம் |
| நீரிழிவு | நீரழிவு |
| பாவித்தல் | பயன்படுத்தல் |
| பாவணையாளர் | நுகர்வோர் |
| கனனி | கணனி |
| கலாச்சாரம் | கலாசாரம் |
| வெத்திலை | வெற்றிலை |
| பிரச்சனை | பிரச்சினை |
| கருப்பு | கறுப்பு |
| உந்தன் | உன்றன் |
| கத்திரிக்கோல் | கத்தரிக்கோல் |
| சித்தரிக்கிறாள் | சித்திரிக்கிறாள் |
| துளிர் | தளிர் |



"அறிவு ஒரு தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறைக்கு செல்லுதல்".

www.padippakam.com




ரேணுகா: ஏய்
பிராந்து... சீன்
முடிஞ்சிட்டு
ரவி: ஐயோ... கட்
பண்ணி திருப்பி
எடுக்றாங்க
இல்லையே...!





நிலா:ஒழுங்காகட்டு
சூர்யா:எத்தனைப்பே
நான்கட்டிவிட்
ருக்கிறேன்
கொஞ்சம்
பேசாம இரு



www.padippakam.com

"கோட்பாதர்"
அஜித் - அசின்



அஜித் : மு...ட்...டு...முட்டு...முட்டு...முட்டு...
அசின்: அஜித் மெதுவா...
அஜித்: என்ன அசின் இவ்வளவு Softட்டா இருக்கிறீங்க



"ஜித்தன்"
ரமேஷ் - பூஜா

ரமேஷ்: பூஜா கொஞ்சம் மேல... ஐ...யோ...
படிப்பகம்
பூஜா: கொஞ்சம் இடம் கொடுக்கா...

www.padippakam.com

# 6 விரல்



தமிழ்நாட்டிலுள்ள எந்த நடிகைக்கும் கையில் ஆறு விரல்கள் இருந்தது இல்லை. 'சந்திரமுகி' படப் புகழ் கேரள வரவு நயன்தாராவுக்கு இடது கையில் ஆறு விரல்கள் இருக்கிறது! 'கள்வனின் காதலி' படப்பிடிப்பில் அதைக் கண்டுபிடித்து கேட்டபோது, "உங்க பார்வை எங்கெங்கோ போகுதப்பா..." என்று சிரித்தபடி கையைக் காட்ட, ஆறாவது விரல் குட்டியூண்டு இருந்தது. அதுசரி, கையில் ஆறு விரல் இருப்பது அதிர்ஷ்டத்தின் அறிகுறி என்று சொல்வார்களே!

சூப்பர் குட் பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவன தலைவர் ஆர்.பி.சவுத்ரியின் மகன்கள் ஜீவா, ரமேஷ் ஆகியோர். 'ஆசை ஆசையாய்', 'தித்திக்குதே', 'ராம்' ஆகிய படங்களில் நடித்து ரசிகப் பெருமக்கள் மத்தியில் வரவேற்புக்குரிய கதாநாயகனாகத் திகழ்கிறார் ஜீவா. 'ஜித்தன்' மூலம் நாயகனாக அறிமுகமாகிறார் அவரது சகோதரர் ரமேஷ். இவர்கள் இரண்டுபேரும் இணைந்து அமீர் எழுதி இயக்கும் படத்தில் நடிக்கின்றனர். இது வித்தியாசமான கதையாம்.


படிப்பகம்

www.padippakam.com



# பூஜா

# பட்டையை கிளப்பினார்

'ஜித்தன்' படத்தில் படுகவர்ச்சி காட்டி நடிப்பதில் பெரும்பாலான கவர்ச்சி நடிகைகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு பட்டையைக் கிளப்பி இருக்கிறார் பூஜா. அதிலும் வெளிநாட்டில் படமாக்கப்பட்ட பாடல் காட்சி ஒன்றில் கதாநாயகன் ரமேஷ் என்ற புதுமுகத்துடன் பின்னிப் பிணைந்து பழரசத்தைப் பிழிந்து எடுத்துவிட்டார். அந்தப் பாடல் காட்சியைத் திரையிட்டுப் பார்த்த பிரமுகர்கள் எல்லோருமே உஷ்ணப் பெருமூச்சு விட்டதைப் பார்க்க முடிந்தது. நடித்தாரே தவிர, இன்னும் அந்தப் பாடல் காட்சியைப் பார்க்க வில்லையாம் பூஜா. பார்த்த பிறகு, என்ன நினைப்பாரோ தெரியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com




உங்களவரை நீங்கள் எவ்வளவு நேசிக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அதேபோல் உங்களையும் அவர் நேசிக்கிறாரா? என்பதை எப்படி அறிந்து கொள்வீரகள்?

கீழ்வரும் எட்டு விடயங்களையும் கவனமாகப்படியுங்கள்:

1. அடிக்கடி வரும் அவரின் தொலைபேசி அழைப்பு:

நீங்கள் உங்கள் அலுவலகத்திலோ வீட்டிலோ, ஏதாவது வேலையிலோ பிஸியாக அல்லது நித்திரிரையில் இருப்பீர்கள். திடீரென்று தொலைபேசி அழைப்புவரும். எடுத்தால்....

"நாந்தான்....."

"என்ன செய்யிறீர்...?"

"இல்ல சும்மாதான்."

"சொல்லுமன்...."

"வேறு என்ன விசேஷம்...?"



படிப்பகம்

உங்களவர்தான் பல்வேறு உபத்திர

www.padippakam.com

**2. நண்பர்களின் பாராட்டு:**

திடீரென்று எப்போதாவது சந்தையிலோ, வீதியிலோ, வழி பாட்டுத்தலங்களிலோ, விருந்து பசாரங்களின்போதோ நீங்கள் கணவருடன் ஜோடியாகப்போயி ருக்கும் போது உங்களவரின் நண் பர்களைச் சந்திக்க நேரும்...

"இவள் தான் என் மனைவி" என்று உங்களை அறிமுகப்படுத் தும் போது...

"கேள்விப்பட்டிருக்கிறேன்..... நிறைய சொல்லியிருக்கான் உங் களப்பத்தி. உங்க சமையல் சூப் பர்ன்னு"


நண்பர் இத்தனையும் உங்க ளிடம் சொல்லி அறிமுகமானால் சந்தோசப்படுங்கள். உங்கள் அருமை, பெருமைகள் நண்பர்க ளுக்கும் தெரிய வேண்டும் என்று விரும்புகின்றார் உங்கள் கணவர்.

**3. உங்களுக்கு பிடித்தவர்களை அவருக்கும் பிடிக்கும்:**

உங்களவர் இதற்கு முன்னால் அந்த நபர்களை சந்தித்திருக்க மாட்டார். உங்களுடைய தூரத்து சொந்தமாகவோ, அல்லது தோழி யாகவோ இருக்கக் கூடும். இருந்தா லும் திடீரென்று அவர்கள் வீட் டுக்கு வரும் போது "மனைவியின் ஆக்கள்" என்று தெரிந்தும் புது முகங்கள் என்ற படபடப்பையும் மறைத்துக்கொண்டு டீ, கூல்ரிங்ஸ் பரிமாறி நிலைமையை சமாளித்து விடுவார். உங்கள் விருந்தாளிகள் போனவுடன் "அவங்கெல்லாம் யாரு" என்று கேட்கும் போது அந்தக்கேள்வியில் உங்கள் மீதி ருக்கும் காதல் வெளிப்படும்...

**4. உங்கள் பேச்சுக்கு கொடுக் கும் மதிப்பு:**





மிகவும் சீரியஸாக இரவு பத்தரை மணிக்கு அலுவலக வேலையில் மூழ்கி இருக்கும் போது "என்னப்பா...." என்று ஆரம்பித்து சொல்லும் போது, எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்து விட்டு "சொல்லுமா..." என்ன விஷயம்" என்று செவிசாய்ப்பார்... சாய்ந்தால் அவர் அன்பு எப்போதுமே உங்கள் பக்கம் சாயும் என்று அர்த்தம்.

**5. சொன்ன நேரத்திற்கு வரும் பழக்கம்:**

சொன்ன நேரத்திற்கு வரும் பழக்கமே தனக்கு கிடையாது, இதற்கு முன் எத்தனையோ முறை நண்பர்கள் காத்திருந்து ஏக வசனத்தில் ஏமாந்திருக்கிறார்கள் என்றெல்லாம் தன் சோம்பேறிக் கதையை உங்களிடம் சொல்லியிருப்பார். ஏதோ ஒரு ஞாபகத்தில் உங்களை அழைத்துச் செல்லும் நேரத்தில் சீக்கிரமாக வந்து விட்டால் அவர் உங்கள் ரசிகர் என்பது அர்த்தம்.

**6. உங்களுடைய விருப்பமே அவருடையதும்:**

நீங்களிருவரும் ஒரு புடைவைக் கடைக்கு போகிறீர்கள். போனதும் உங்கள் சொய்ஸ்தான் என்று சொல்லாமல் "இது உனக்கு நல்லாயிருக்கும்" "இந்த கலர் உனக்கு எடுப்பாயிருக்கிறது. என்றெல்லாம் சொல்லி, உங்கள் விருப்பத்தையே மதித்து செய்தால் நீங்கள் அதிஷ்டசாலி.

**7. பிடிக்காத விஷயங்களை பற்றி பேசுவதில்லை:**

உங்களுக்கு என்ன பிடிக்கும் என்று தெரிந்து வைத்திருப்


**(72 ஆம் பக்கம் பார்க்க)**

www.padippakam.com

# வேர்களின் மலர்கள்

மண்ணுக்குள் இருக்கும்
வேர்களின் கனவுகள்
என்னவாக இருக்கும்

தன் செடியில்
பூத்திருக்கும் பூக்களின்
முகங்களை
பார்க்க முடியாமல் போன
சோகங்களை யாருக்கு
சொல்லும்



www.padippakam.com

மண்ணுக்குள்
தன் வேர்களைப் பார்க்க
முடியாமல்
எத்தனைப் பூக்கள் வாடி
இருக்கும்

பூக்களைப் பார்க்க
முடியாமல் போன வேர்கள்
என்றாவது அழுதிருக்குமா!

பூக்களின் அழகை
ரசித்த நாம்
என்றாவது வேர்களின்
வேதனையை
உணர்ந்திருக்கிறோமா

பூக்களைப் பற்றி கவிதைகள்
படைக்கத் தெரிந்தவர்கள்
நாங்கள்
வேரைப் பற்றி எத்தனை
வரிகள்
எழுதியிருக்கிறோம்!

வேருக்குச் சொந்தமான
பூக்களை வேரிடம்
கேட்டு விட்டா
பறிக்கிறோம்!

வேர்களுக்கு சொந்தமான
பூக்களை வேரிடம்
கேட்காமல் பறிக்கும்
உரிமை யார் தந்தது!

வேர்களின் வேதனைகளை
தெரிந்திருந்தால்
பூக்களை காயப்படுத்த
மாட்டோம்

வன்முறைகள் நிறைந்த
உலகில்
பூக்களைப் போல
புன்னகை செய்கிறேன்

என்
வேதனைகளோ
வேர்களாக
மனதில்.....!

படிப்பகம்

www.padippakam.com

# எழும்பி உட்கார வைக்கும்



# "அந்நியன்"

வாசலில் ரசிகர்கள் கூட்டம்.... அவர் எப்போது வெளியே வருவார், எப்போது அந்த வழக்கமான இளம் புன்னகையுடன் 'ஹாய்' சொல்லுவார் என்று ஆவலுடன் காத்திருக்கிறார்கள்.

ஒரு நட்சத்திர இல்லத்துக்குரிய பளபளப்புகள் எதுவும் இல்லாமல் கலைப் பொருட்கள் அடுக்கி வைத்தது போல அழகாக எளிமையாக இருந்தது வீடு!

சிறிது நேரத்தில் 'சீயான்' விக்ரம் அன்பு கலந்த வணக்கத்தோடு வரவேற்றார். காத்திருந்த தன் ரசிகர்களை நோக்கி விரைந்தார். அவர்களுடன் சிறிது நேரம் மகிழ்ச்சி ததும்ப பேசிக் கொண்டிருந்தார்.



படிப்பகம்

ரசிகர்களுக்கு விடை கொடுத்துவிட்டு வந்தார் விக்ரம். மளமளவென நம்முடன் பேச ஆரம்பித்தார்! இனி அவருடைய பேட்டியிலிருந்து...

ஷங்கர் சார் கடுமையா உழைக்கிறார். நான் அந்தப் படத்தில் செய்துள்ள கதாபாத்திரம் ரொம்ப சேலஞ்சிங்கானது. நான் தனி டிராக்ல போறேன். எனக்கு நடிப்பு என்றால் கொள்ளை ஆசை. அதனால் ஜனரஞ்சகமான படங்களிலும் நடிப்பேன். அதனால் அதுபோன்ற படங்களில் எளிதில் நடித்துவிடலாம். ஆனால் இந்தப் படம் எல்லோரையும் எழுப்பி உட்கார வைக்கும்.

"நல்லா பண்ணியிருக்காங்க, கடுமையா முயற்சி பண்ணியிருக்காங்க"ன்னு எல்லாரையும் பேச வைக்கும். சந்தேகமே கிடையாது.

குதிரைக்கு கடிவாளம் போட்ட மாதிரி வேறு எந்தப் பக்கமும் பார்வை இல்லாமல் 'அந்நியன்' படத்தோட சிந்தனையிலேயே இருக்கிறார் ஷங்கர் சார். அவரது சிந்தனை வித்தியாசமானது. இந்தப் படம் முடிந்த பிறகுதான் அவர் வேறு விஷயங்களைப் பற்றி பேசுவார். நல்ல உழைப்பாளி. படம் ஆரம்பித்ததிலிருந்து எந்த ஒரு விழாவுக்கும் அவர் சென்றது கிடையாது. அவருடன் பணி புரிந்த நாட்களை மறக்க முடியாது என்றார் சீயான் விக்ரம். ●




சூப்பர் ஸ்டார் நடித்து நீண்ட இடைவெளிக்குப்பின்னர் வெளிவந்து வசூல் சாதனை படைக்கும் சந்திரமுகி படத்திற்கு புகழாரம் சொரிய - பல்வேறு பேச்சுக்கள் அடிபட...

தமிழ்நாடு, சென்னையில் போயாஸ தோட்டத்தில் உள்ள ரஜினியின் வீட்டுக்கு டெலிபோன் எடுத்து "இலங்கை விகடனில் இருந்து பேசுகிறோம். "சந்திரமுகி" படம் பற்றி ஒரு ஜொலியான பேட்டி தேவை...

www.padippakam.com

நாங்கள ஆங்காங்கே தகவல்களை விசாரித்து எழுதுவதைவிட வாசகர்களுக்காக நீங்களே பிரத்தியோகமாக தகவல் தந்தால் மகிழ்ச்சியாக இருக்கும்" என்றோம்.

"கொஞ்சம் வேலைகள் இருக்கின்றன. முடிந்தவுடன் உங்களுக்கு இன்றோ, நாளையோ போன் செய்கிறேன்" என்றார் ரஜினி.

# சந்திரமுகி பற்றி ரஜினியுடன் / தொலைபேசி ஊடாக ஒரு பேட்டி...




இரவு போன் வரவில்லை. மறுநாள் காலையில் ரஜினி பேசினார்.

"பேட்டி சந்திரமுகி படம் பற்றி மட்டும்தான்! கேள்விகள் எதுவும் பெரிதாக கேட்கப்போவதில்லை. நீங்களாகப் படம் பற்றி... உங்கள் எண்ணங்கள்... வெற்றிகள் பற்றியெல்லாம் கூறுங்கள் என்றேன். "ஒரு படத்துல நடிக்கிறோம்னா, அதை முடிச்சுக் கொடுக்கற வரைக்கும் எனக்கு வேறு நினைப்பு இருக்காது.

படிப்பகம்

www.padippakam.com



ஏதோ யோசிச்சுக் கிட்டே இருக்கும் போது, சட்னு ஒரு பேரு தோணும்... அதை செஞ்சுக்கிட்டு அப்புறம்தான் கதை பத்தியே யோசிக்கிறது வழக்கமா யிடுச்சு.

முடிச்சுட்ட அப்புறமும் படம் ரிலீஸ் ஆகற வரைக்கும் மனசு எதுலயும் ஒட்டாது. அப்புறம் கரெட்டா பத்து நாள் பார்ப்பேன். படத்தை ஜனங்க எப்படி "ரிஸீவ்" பண்றாங்கனு தெரிஞ்சுகிட்டதும் அதோட சரி... அந்தப் படத்தைப் பத்தி கம்ப்ளீட்டா மறந்துடுவேன். எங்கேயாச்சும் பறந்துடுவேன். ஒரு ஏழெட்டு மாசம் அங்கே, இங்கே... அப்படி, இப்படி.. ரவுண்ட் அடிச்சுக்கிட்டே இருப்பேன். அடுத்த படம் பண்ணலாம்னு மனசுக்குள்ளே ஒரு பொறிதட்டும் ! "ஹாலிடே"யை முடிச்சுக்கிட்டு திரும்ப வந்து உட்காந்துடுவேன். "அப்போ "சந்திரமுகி" படத்துக்கு பிறகு அடுத்தபட வேலைகளை எப்போது ஆரம்பிக்கவுள்ளீர்கள்?" "அடுத்த படம் குறித்து முடிவெடுப்பதும், படத்திற்கு பெயர்வைப்பதற்கும் ஏதோ ஒரு விதமான உள்ளுணர்வுதான் காரணம்.

ஏதோ யோசிச்சுக்கிட்டே இருக்கும் போது, சட்னு ஒரு பேரு தோணும்... அதை செஞ்சுக்கிட்டு அப்புறம்தான் கதை பத்தியே யோசிக்கிறது வழக்கமாயிடுச்சு."

"சரி! சந்திரமுகி நீங்க எதிர்பார்த்த மாதிரி திருப்தியா ஜொலியா



படிப்பகம்

www.padippakam.com


வந்திருக்கா...?

இந்தப்படத்தை நான் நாலஞ்சு தடவை பார்த்துட்டேன்... ஜோதிகாட கரெக்டர் எனக்கு ரொம்பப்பிடிச்சுது; என்னைக் கேட்பீங்கன்னா படத்தில ஜோதிகாதான் ஹீரோயின்னு தோணற அளவுக்கு கதையோட சேர்த்து பின்னிக்கிட்டு வருது அவர் கரெக்டர்.

ஜோதிகா ரொம்ப நல்லா செய்திருக்காங்கள். அவங்களுக்கு கொடுத்த பாத்திரத்தை முழுமையாக ஏற்று அந்த பாத்திரமாகவே மாறி நடிச்சிருக்காங்க. அவங்களுக்கு பரதநாட்டியமே தெரியாது. இந்தப் பாத்திரத்திற்காக ஒரு கிழமையில் ஒழுங்காக ரொம்ப நல்லாவே பழகிட்டாங்க. இந்தப்படத்தை பாக்கிறப்போ என்னாலேயே நம்பமுடியவில்லை. அந்தளவுக்கு ஜோதிகா ரொம்ப நல்லா பண்ணியிருக்காங்கள். அதே மாதிரி, ரொம்ப நாள் கழிச்சு விஜயகுமாருக்கு ஒரு வித்தியாசமான கரெக்டர். பிரபு அருமையா செஞ்சிருக்கார். இந்த ஜெனரேஷன்ல இருக்கிறவங்க, வெறும் காமெடியை மட்டும் பார்க்காம, கொஞ்சம் திரில் கலந்த காமெடியைத் தந்திருக்கிறார் வடிவேலு.

நயன்தாராவின் பங்கு கொஞ்சமாக இருந்தாலும் நல்லாவே செய்திருக்காங்க. "சந்திரமுகி" பஞ்டயலொக் "லகலக"

**இது எக்கச்சக்கமான பணம் போட்டு நடக்கிற பிஸினஸ்... அதனால்தான் இதை "இண்டஸ்ட்ரி"னு சொல்றோம். எகனமிக்ஸ் டிமாண்ட் அண்ட் சப்ளை தியரிதான் இங்கே ஜனங்களுக்கு எது தேவையோ, அதை கரெக்ட்டா கொடுக்கணும்.**



www.padippakam.com




ரொம்ப நல்லாவே இளைஞர்கள் மத்தியில் எடுபட்டிருக்கு இந்த டயலொக்கைதான் ரொம்ப விரும்பிச் செய்தேன். அதை ஜோதிகாவும் சொல்வது ரொம்பவும் அழகாக இருந்தது.

"சந்திரமுகி படத்தில் என்ன "மெஸேஜ்" சொல்லியிருக்கீங்க?

"நம்ப படத்துலயெல்லாம் தொண்ணூறு சதவிகிதம் பொழுது போக்கு அம்சம் தான்... பத்து பர்சென்ட் வேணா மெஸேஜ்ஜு ஏதாவது சொல்லலாம். எப்பவுமே "நான் மெஸேஜ் சொல்றேன்... வித்தியாசமாக ஏதாவது செய்றேன்னு என்னை வெச்சு எக்ஸ்பெரிமெண்ட் எல்லாம் பண்றதில்லே... ஜனங்க என்கிட்ட என்ன எதிர்பார்க்கிறாங்கனு நல்லாத் தெரியுது. அதைச்செஞ்சுட்டுப் போறேன். ஏன்னா, இது எக்கச்சக்கமான பணம் போட்டு நடக்கிற பிஸினஸ்... அதனால்தான் இதை "இண்டஸ்ட்ரி"னு சொல்றோம். எகனமிக்ஸ்! டிமாண்ட் அண்ட் சப்ளை தியரிதான் இங்கே! ஜனங்களுக்கு எது தேவையோ, அதை கரெக்ட்டா கொடுக்கணும். நான் ஒரு விருந்துக்குக் கூப்பிடறேன்னு வெச்சுக்கங்க... என்னவெல்லாம் உங்களுக்குப் பிடிக்கும்னு முன் கூட்டியே தெரிஞ்சுகிட்டு, அதையெல்லாம் விருந்து படைக்கணும். அதை விட்டுட்டு, "உங்களுக்குச் சப்பாத்தியா பிடிக்கும்... அடடா... இங்கே தயிர்சாதம் தான் இருக்கு"னு சொன்னா... அதுக்குப் பேரு விருந்தா...? அதைவிடப்பேசாம, நீங்களே வீட்டுல சமைச்சு சாப்பிடலாமே...?

கடவுள் சக்தி என்பது ஒரு சூப்பர் நேச்சுரல் பவர்! அப்படி ஒரு சக்தி இருக்குறதில் உங்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தா, அந்த சக்தி உங்களை சரியான பாதையில் வழிநடத்தும். அடுத்தடுத்து என்ன செய்யணும், எப்படிச் செய்யணும் அப்படிங்கிறதை நம்ம உங்களுக்குள்ளே இருந்துகிட்டு, வழிகாட்டிக்கிட்டே வரும். என் கரெக்டர் இந்தப்படத்தில் அப்படித்தான்! "நிஜ வாழ்க்கையிலேயே நீங்க அப்படித்தான்... இல்லையா...?" "நிச்சயமா! அடிப்படையிலேயே இத முழுசா நம்பறவன் நான்.... நமக்கெல்லாம் மேலே ஒரு அற்புதமான சக்தி இருக்கு. அதுல எந்தச் சந்தேகமும் வேண்டியதில்லே... நாளைக்கு என்ன நடக்கப்போகுதுனு முன்கூட்டியே தெரிஞ்சுக்க நம்மால முடியாது தான்.

அதேசமயம், நல்லது நடக்கும்னு நம்பிக்கையோட நல்லவனா வாழ்ந்தா நிச்சயம் நல்லா இருப்போம். ராயப்பேட்டையில் ஒரு சின்ன ரூம்ல, ஃப்ரெண்ட்ஸோட சேர்ந்து இருந்தப்பக்கூட, என்னை ஆண்டவன் கைவிட மாட்டான்னு நூத்துக்கு நூறு நம்பினேன்... ஆனா, இந்த அளவுக்கு என்னைக்கொண்டு வருவான்னு நிச்சயம் நான் நினைக்கலே!"

பேட்டி: யாவும் கற்பனை.



படிப்பகம்

www.padippakam.com

# தப்பு செய்தவளா




எம். விசாகரூபன்
சண்முகம்.

"எதையும் மறைக்காமல் சொல்லு... என்ன நடந்தது...?"

அவ்வளவுதான் - என் உடல் நடுங்கியது. வேர்த்துக்கொட்டியது. முதலிரவன்று ஒரு பெண்ணுக்கு ஏற்படும் இயல்பான உணர்வுகளால் அல்ல, காலையில் இருந்தே விட்டு விட்டு தலைசுற்றுகிறது. எதுவும் சாப்பிடப்பிடிக்கவில்லை. குமட்டிக்கொண்டு வருகிறது. யாருக்கும் தெரியாமல் நான்கு முறை பாத்ரூம் போய் சத்தி எடுத்து விட்டேன்.

நான் இங்கே துடித்துக் கொண்டிருக்க, என்னுடைய இந்த நிலைக்குக் காரணமாக இருந்த முரளி இப்போது எங்கே, யாரு

படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்

டன், எப்படி பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கிறானோ?

கல்யாணம் செய்துகொண்டிருப் பது ஒரு டாக்டரை அவருக்கு என் நிலைமை புரிய ரொம்ப நேரமாகாது.

நான் தயங்கித்தயங்கி நிற்பதைக் கண்டதும் அவரே எழுந்து வந்து என் கையைப்பிடித்தார். அவரது கைகளை உதறிவிட்டு, பாத்ரூமுக்கு ஓடினேன். கடகட என்று சத்தி எடுத்தேன்.

"என்ன சாந்தி...?" என்று பதறியவாறே ஆனால் அன்போடு என் முதுகைத் தடவினார். கைகளைப் பற்றி நாடி பிடித்துப் பார்த்தார். நாக்கை நீட்டச் சொன்னார்.

அவருக்கு எல்லாமே புரிந்துவிட்டது போல அவரது முகபாவம் மாறியது. என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார். பின், கண்டிப்பு கலந்த குரலில் கேட்டார்... "எதையும் மறைக்காமல் சொல்லு... என்ன நடந்தது...?"

ஆனது ஆகட்டும் என்று நடந்தது அனைத்தையும் மறைக்காமல் ஒப்பித்தேன்.

"உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது என்று தெரிந்தும், ஏன் அவ்வளவு பச்சை கச்சானை தின்றாய்...? முரளி சின்னப்பெடியன் அவன் தந்தால், உனக்காவது அறிவு வேண்டாமா?" என்று கோபித் துக்கொண்டவர், "சரி...சரி... ஒரு மாத்திரை தாரேன் போடு நாளைக்குச்சரியாயிடும்..." என்றபடி, என்னை இறுக அணைத்துப்படுக்கையில் சாய்த்தார். ■



www.padippakam.com

(எம். சுரபி, அல்விஸ் ரவுன், வத்தளை)
கேள்வி : உங்களைக் கவர்ந்த சம்பாசணை ஒன்று?

பதில்: கிரேக்க நாட்டில் நடந்த வரலாற்று தகவல் ஒன்று இது! மாவீரன் அலெக்ஸாண்டர் பிறந்தவுடன் அவனுடைய தந்தையான பிலிப்ஸ் மன்னர் அந்நாட்டின் ஞானியான அரிஸ்டாட்டிலை சகல மரியாதைகளுடன் சந்தித்தார். குழந்தை பிறந்திருப்பதற்கு வாழ்த்து தெரிவித்தார் அரிஸ்டாட்டில். உடனே மன்னர் பிலிப்ஸ், "ஐயா, எனக்கு மகன் பிறந்தான் என்று நான் மகிழவில்லை. தாங்கள் வாழும் காலத்தில் அவன் பிறந்தான் என்றே மகிழ்கிறேன்." என்று சொன்னாராம். (அறிவுக்கு, அரசன் செலுத்திய மரியாதை மரியாதைக்குரியது. இன்றைய காலத்தில் அறிவை விட வேறு எதற்கெல்லாமோ மரியாதை கிடைக்கிறதே.....?)




*மாவீரர் அலெக்ஸாண்டர்*

***



படிப்பகம்

www.padippakam.com



(ஜெயவரதன். ராகம)

கேள்வி: தொடர்ந்து வெற்றி பெற்று வருபவர்களுக்கு திடீர் தோல்வி ஏற்பட்டால் தாங்க முடியுமா?

பதில்: சில சமயங்களில் தோல்வி அவசியமான ஒன்றுதான். அது இல்லாமல் தொடர்ந்து வெற்றி பெறும் போது தங்களைக் கடவுளாக நினைத்துக் கொள்கிறார்கள்.

***

(வி. நியூட்டன். சில்லாலை வீதி. பண்டத்தரிப்பு)

கேள்வி : குரு-சீடன், தந்தை-மகன், தாய்-மகள், அண்ணன்-தம்பி உறவு, அக்கா-தங்கை உறவுகள் எப்படி இருக்கவேண்டும்?

பதில்: நிலம் போல நிமிர்ந்து நிற்பதற்கும், மலர்ந்து சிரிப்பதற்கும் குருவின் உறவுதான் ஆதாரம். ஆனால் விளைவது விதையைப் பொறுத்தது. தந்தை - மகன் உறவு காற்று; கட்டிப்போட முடியாது. தடுத்தால் வேகம் கூடும், குறையும். அண்ணன் - தம்பி உறவு நெருப்பு; ஒளியும் இருக்கும், உஷ்ணமும் உண்டு. தாய் - மகள் உறவு தண்ணீர்; பாத்திரத்திற்கேற்ப வடிவங்கள் மாறும். ஆனால் அடிப்படைக் குணங்கள் மாறாது. அக்கா - தங்கை உறவு ஆகாயம்; தொலை தூரத்திற்கு விலகிப் போகலாம். ஆனால் எப்போதும் ஈரம் இருந்து கொண்டிருக்கும்.

***



(மொகமட். அலிரம்பா றோட். பம்பலப்பிட்டி)

கேள்வி: மொபைல் போன் வெறும் பகட்டு



www.padippakam.com



தானே, அது இல் லாமல் இத்தனை வருடங்கள் மனிதன் வெற்றிகரமாக செயற்பட வில்லையா?

பதில்: சைக்கிள், புகையிரதம், தொலைக்காட்சி, குளிரூட்டி '. இவை எதுவும் இல்லாமல் மனிதன் இலட்சக்கணக்கான வருடங்கள் செயற்திறனுடன் வெற்றிகரமாக வாழ்ந்திருக்கிறான். இதெல்லாம் கடந்த ஓரிரு நூற்றாண்டில் வந்தவைதான். அதுபோலதான் கைத்தொலைபேசியும்.

(இன்று வெளிநாடுகளில் விவசாயிகள் வயல்களில் இருந்து கொண்டு காலநிலை, உரம், கிருமிநாசினி போன்ற தகவல்களை "மொபைல் போன்" மூலம் கேட்டுத்தெரிந்து கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். ஆகவே மொபைல் போன் ஒரு பகட்டு பொருள் இல்லை. பகட்டுக்காக மொபைல் போன் வைத்திருப்பது வேறு விடயம்.)

***

(என். கே. கௌரி. ஏத்துக்கல். நீர்கொழும்பு)

கேள்வி : ஆண் எப்பொழுது அழகு?

பதில்: பரிவும் அனுசரணையும் தாய்மைக்குரியது என்பார்கள் இந்தத் தாய்மை என்பது ஒரு உணர்வு. இந்த உணர்வு ஒரு ஆணுக்கும் இருந்தால் அவன் அழகாக இருப்பான்.

ஒருவனைப் பார்த்தவுடனே இவர் நேர்மையானவர், கண்ணியமானவர், இவரிடம் நட்பு கொள்ளலாம் அல்லது கூடாது போன்ற விசயங்களை கண்ணில் படித்து விட முடியும். எந்தக் கண்ணை நேருக்கு நேராக சந்தித்துப் பேச முடிகிறதோ அந்த கண்களே அழகு. குறிப்பாக ஆண்களுக்கு கனிவான கண்கள் மேலதிக அழகு.

எதையும் தாங்கும் இதயமாக இருப்பதே ஆணுக்கு அழகு, எதற்கும் தலையாட்டிக் கொண்டிராமல் நல்லதாக இருந்தால் ஏற்று, தவறாக இருந்தால் பக்குவமாக எடுத்துச் சொல்லும் துணிவு, உண்மையான பணிவு. இந்த நேர்மையான பணிவு - கம்பீரம் தரும். அழகும் தரும்.

***

(சுப்பிரமணியம் - அராலி தெற்கு. வட்டுக்கோட்டை)

கேள்வி: கடுமையாக உழைக்கும் தொழிலாளர் களுக்கு குறைவான சம்பளமும், குளிரூட்



படிப்பகம்

www.padippakam.com

டப்பட்ட அறையில் சொகுசாக இருந்து வெறும் கையெழுத்து மட்டும் போடும் அதிகாரிகளுக்கு அதிக சம்பளமும் ஏன்?

பதில் : இந்த அநியாயத்தைப் பாருங்களேன்! கடிகாரத்தில் அள வில் சிறிய முள் அது. ஆனால் அது சிறிது அசைந்தால் ஒரு மணி நேரம் ஓடிப்போய் விடுகிறது. அளவில் பெரிய முள் குடுகுடு என்று ஒரு சுற்று சுற்றி வந்தாலும் ஒரு நிமிடம் தான் ஆகிறது.

***

(எஸ். ரி. கிஷாந்தன் - ஜெம்பட்டா வீதி. கொழும்பு -13)

கேள்வி: ஆவதும் பெண் ணாலே அழிவதும் பெண்ணாலே என்றால் ஆண்கள் என்ன குப்பைகளா?

பதில்: பெண்கள் ஆவ தும் ஆணாலே தான். ஆக வே ஆண் கள் குப்பைகள் இல்லை.

***

(எஸ். விவேகானந்தன். 37வது ஒழுங்கை. கொழும்பு - 06)

கேள்வி: பதறாத காரியம் கூட சிதறிப் போவதுண்டு. எப்போது என தங்களால் சொல்ல முடியுமா?

பதில்: எப்போதா? மழை பெய்யும் போதெல் லாம் கொழும்பில் அதைப் பார்க்கலாம். நகரின் வீதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான பள் ளங்களில் தேங்கும் தண் ணீர் பதறாமல் இருக்கும். ஏதாவது வாகனம் போகும் போது அத்த னையும் சிதறி "அப்பனே, சிவனே" என்று போகிறவர்கள் மீது சேறாக அபிஷேகம் நடக்கும்.

***

(எம். எம். சுஹைர். மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம்.)

கேள்வி: என் கனவுக்கன்னி ஜோதிகா நூறு வயதில் எப்படி இருப்பார் என்று பார்க்க ஆசை உங்களால் முடியுமா?

பதில்: அத்தனை பேரும் இள மை ததும்பும் சந்திரமுகி ஜோதி காவை ரசித்துக் கொண்டிருக்க நீங்கள் மட்டும் கொள்ளுப்பாட்டி



www.padippakam.com



ஜோதிகாவை பார்க்க விரும்புகிறீர்கள் என்றால் மனோதத்துவ ரீதியாக உங்களுக்கு subconscious or subliminal self எனப்படும் (ஆழ் மனதில் ஏதோ பிரச்சினை என்று பொருள்)நோய் உள்ளது. உடனே யாரேனும் மன நோய் மருத்துவரிடம் காட்டவும். என்னைப் பொறுத்த மட்டில் ஜோதிகாவை 100 வயதில் பார்க்க எனக்கு விருப்பம் கிடையாது.

***

(எச். சந்திரகுமார். கொட்டாஞ் சேனை வீதி. கொழும்பு - 13)

கேள்வி: பணத்திற்காக வேலை செய்வது மற்றவர்களின் அன்புக்காக வேலை செய்வது இவற்றில் சந்தோசம் அளிப்பது எது?

பதில்: பணம் வாழ்க்கைக்கு தேவை. அன்பு மனசுக்கு தேவை. நிறைந்த மனதோடு வாழ்வதே மனிதனுக்கு தேவை.

***

(வி. தயாபதி. தெமட்டக்கொட)

கேள்வி: உலகின் மிகப்பெரிய புரட்சிகரமான ஐடியாக்கள் எதேச்சையாகவே மனிதனுக்கு தோன்றியவை. உண்மையா எப்படி சாத்தியமாகும்?

பதில்: உண்மைதான். ஆயிரக் கணக்கில் அவற்றை வரிசைப் படுத்த முடியும். உதாரணமாக நியூயோர்க்கில் வசித்த மேரி ஜேக்கப் என்ற பெண்மணி இரண்டு கைக்குட்டைகளையும் ரிப்பன்களையும் இணைத்து 1914 ஆம் ஆண்டு உருவாக்கியதுதான் இன்று உலகப் புகழ்பெற்றிருக்கும் "பிரா"! அதாங்க.



படிப்பகம்

www.padippakam.com

# மனநிம்மதியான வாழ்க்கை

ஞானி ஒருவர் ஊரின் ஒதுக்குப்புறமான பகுதியில் வாழ்ந்து வந்தார். அவர் பெரிய ஞானி என்றும் எல்லோருடைய பிரச்சினைகளுக்கும் தெளிவான ஆறுதலும் விளக்கமும் அளிக்கிறார் என்றும் ஒரு பேராசிரியருக்கு தகவல் கிட்டியது.

பேராசிரியர் அவரைப்பார்க்கச் சென்றார். நிம்மதி பற்றியும் பேரானந்தம் பற்றியும் தனக்கு சொல்லித்தரவேண்டும் என்றார்.

பேராசிரியர் முன்னிலையில் ஞானி செய்த செயல் குழப்பம் தருவதாகவே இருந்தது. தனக்கு முன்பிருந்த இரண்டு தம்ளரில் ஒன்று நீர் நிரம்பியிருந்தது. இன்னொன்று வெறுமையாக இருந்தது. வெறுமையான தம்ளரை நிரப்பிவிட்டு நீர் நிறைந்த தம்ளரில் மீண்டும் தண்ணீரை ஊற்றினார் ஞானி. அது நிரம்பி வளிந்தது.

"ஞானியே ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டார் பேராசிரியர்.

ஏற்கனவே நிறைந்திருக்கும் தம்ளரில் எப்படி ஒரு சொட்டுத்தண்ணீர் கூட ஊற்ற முடியாதோ, அது போலவே ஏற்கனவே ஏகப்பட்ட விசயங்களை போட்டு மனதை நிரப்பி வைத்திருக்கிறீர்கள். அவற்றை நீங்கள் உங்கள் மனதிலிருந்து அகற்றாத வரை நிம்மதி பற்றியும் பேரானந்தம் பற்றியும் உங்களுக்கு சொல்லித்தர முடி யாது என்றார் ஞானி.

தேவையான விசயங்கள் மட்டுமே உங்கள் மனவங்கியில் சேரும்போது நீங்கள் செய்யும் எந்தச்செயலும் அர்த்தமற்றதாக இருக்காது. உங்கள் வாழ்க்கையும் ஆனந்தம் நிறைந்ததாக இருக்கும். ■

சி. குமார்
வெள்ளவத்தை

படிப்பகம்

www.padippakam.com

Vikadan

# சில்லி சிக்கன்

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| கோழி | - 1 கிலோ |
| கோழி முட்டை | - 2 |
| மிளகாய்ப் பொடி | - 2 தே. கரண்டி |
| கோதுமை மா | - 3 கரண்டி |
| எண்ணெய் | - 2 கோப்பை |
| வெங்காயம் | - 2 கோப்பை |
| பச்சை மிளகாய் | - 7 |
| தக்காளி ஸாஸ் | - 3 கரண்டி |
| உப்பு | - தேவைக்கேற்ப |

**தயாரிக்கும் முறை:**

கோழித் துண்டுகளைத் தண்ணீரில் கழுவி வைக்கவும். ஒரு பாத்திரத்தில் முட்டையை உடைத்துப் போட்டு மிளகாய்ப் பொடியையும் கலந்து வேக வைக்கவும். முட்டை வெந்து வரும் போது சில்லி ஸாஸ், சோயா ஸாஸ் முதலியவற்றைக் கலந்து நன்றாகக் குழைத்து துண்டுகளில் தடவி ஒரு மணி நேரம் வைக்கவும். (துண்டுகளில் கொஞ்சம் தண்ணீர் கூட இருக்ககூடாது) பிறகு துண்டுகளைக் காய்ந்த எண்ணெயில் வறுத்து எடுக்கவும். சூடான இரும்புச்சட்டியில் இரண்டு மேசைக் கரண்டி எண்ணெய் விட்டுச் சூடானதும் வெங்காயம், பச்சை மிளகாய் ஆகியவற்றைச் சேர்த்து வதக்கித் தயாராக வைத்திருக்கும் இறைச்சியில் போட்டுக் கொஞ்ச நேரம் கிளறி இறக்கிச் சூடாக உபயோகப்படுத்தலாம்.

# இட்லி

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| சம்பா அரிசி | - 1 சுண்டு |
| வெள்ளைப் பச்சை அரிசி | - 1 சுண்டு |
| உளுந்து | - 1 சுண்டு |

உப்பு தேவையான அளவு.

www.padippakam.com

கிச்சன்

செய்முறை:

காலையில் அரிசி உளுந்து என்பவற்றை ஊற வைத்து மாலையில் மிக்சியில் ஓரளவு தண்ணீர் விட்டு அரிசியை தனியாவும், உளுந்தை தனியாகவும் அரைத்தெடுத்து உப்பும் சேர்த்து எல்லாவற்றையும் ஒன்றாக கலந்து புளிக்க வைத்துக்கொள்ள வேண்டும். மறுநாள் காலையில் இட்லிச் சட்டியில் அதற்குரிய அச்சில் "லஞ் சீற்றை" போட்டு அதற்கு மேல் (இட்லியை சுலபமாக எடுப்பதற்கு) இட்லி மாவை ஊற்றி வேகவைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

## சட்னி

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| தக்காளி | - 4 |
| வெங்காயம் | - ½ கோப்பை நறுக்கினது |
| மிளகாயப் பொடி | - 1 தே. கரண்டி |
| உளுத்தம் பருப்பு | - ½ தே. கரண்டி |

தயாரிக்கும் முறை:

தக்காளியை நறுக்கி வைக்கவும். வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு வெங்காயத்தைப் போடவும். வெங்காயம் பொன்னிறமாக ஆனவுடன் தக்காளியைப் போட்டு வதக்கவும். மிளகாய்ப் பொடியையோ அல்லது பச்சை மிளகாய், இஞ்சியையோ போட்டு நன்றாக வதக்கி எடுக்கவும். இவை அனைத்தையும் அம்மியிலோ அல்லது மிக்ஸியிலோ நன்றாக அரைக்கவும். பிறகு கடுகும் உளுத்தம் பருப்பும் போட்டுப் பொரிந்தவுடன் அரைத்த தக்காளியும் சிறிது பொருங்காயப் பொடியும், கறிவேப்பிலையும் சேர்த்துக் கிளற வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

(51 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

பதைவிட உங்களுக்கு என்ன பிடிக்காது என்று தெரிந்து வைத்திருந்தால் உங்களவர் உங்களுடைய உணர்வுகளுக்கு மிகவும் மதிப்புக் கொடுக்கிறார் என்று அர்த்தம். இது இல்லாததால்தான் பல சமயங்களில் ஏதாவது அன்பளிப்பொருள் வாங்கிக்கொடுத்துவிட்டு, அதை நீங்கள் அவ்வளவாக அக்கறையுடன் ரசிக்கவில்லை என்று எப்படியோ தெரிந்துகொண்டு "சொல்லிருக்கலாம்ல, இதெல்லாம் உனக்கு பிடிக்காதுன்னு மூட் அவுட் ஆவதெல்லாம் நடக்கிறது.

8. உணர்ச்சி வசப்பட்டு உச்சரிக்கும் வார்த்தை:

சில சமயம்

நீ எனக்கு கிடைச்சது பெரிய கிவ்ட்.

"ஐ லவ் யூ சோ மச்"


நீ வந்த பிறகுதான் என் வாழ்க்கையே மாறிப்போயிட்டு. இந்த வார்த்தைகள் வெளிப்படும். வெளிப்பட்டால் அது அவர் உங்கள் மீது வைத்திருக்கும் அன்பின் முழுமையான வெளிப்பாடு. ■



## முன்னோடி

பெண்களின் பெயரில் ஆண் எழுத்தாளர்கள் புகுந்து கொண்டு எழுதுவது இப்போது வழக்கமாகி விட்டது. ஆனால் இந்த வழக்கத்துக்கு முன்னோடியாக இருந்தவர் வ.வே.சு.அய்யர். தனது மனைவியின் பெயரான "சு.பாக்கியலஷ்மி அம்மாள்" என்ற பெயரில் 1915 இல் "குளத்தங்கரை அரச மரம்" என்ற சிறுகதையை எழுதியிருந்தார். "விலேக போதினி பத்திரிகையில் இச்சிறுகதை பிரசுரமாகியிருந்தது.

"நானே பில் காசு கொடுத்திடுறேன்... கையைக்கழுவுற இடத்தில கால் உளைய நிக்க வேண்டாம்... வந்து உக்காரு!"



www.padippakam.com

# வேலைவாய்ப்பு படிவம்

*01.*பெயர் :- ........................................................................

*02.*கல்விதகுதி :- ........................................................................

*03.*எதிர்கால இலட்சியம் :- ........................................................................

*04.*அனுபவம் :- ........................................................................

*06.*ஆர்வமான துறை :- ........................................................................

*07.*எதிர்பார்க்கும் துறை :- ........................................................................

*08.*எதிர்பார்க்கும் சம்பளம் :- ........................................................................

*09.*நிரந்திரமான தொழிலா? அல்லது
பகுதி நேரமான தொழிலா? :- ........................................................................

*10.*கடமையாற்ற விரும்பும் தொழில் :- ........................................................................
........................................................................

*11.*பிறந்த திகதி :- ........................................................................

*12.*விலாசம் :- ........................................................................
........................................................................

*13.*தொடர்புக் கொள்ளக் கூடிய தொலைபேசி
இலக்கம் :- ........................................................................

*14.*தற்போது கடமையாற்றுபவராயின் அது குறித்த
விபரம் :- ........................................................................
........................................................................
........................................................................

.................................... ....................................

கையொப்பம் திகதி

இவ்விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டிய
விலாசம் ILLANKAI VIKADAN
160, THELANKAPATHA ROAD, WATTALA.



படிப்பகம்

www.padippakam.com

# வாழ்வது ஒரு கடமை

வாழ்க்கை இந்த வார்த்தையின் பொருள்தான் என்ன? அதனுள் அல்லது அதற்கு வேறு அர்த்தங்கள் ஏதும் உள்ளதா? இல்லை வெறுமனே அந்த வார்த்தைக்கு அர்த்தம் எதுவுமில்லை. வாழ்க்கை என்பதற்கு, வாழப்படும் முறையிலும் அது நோக்கப்படும் கோணத்திலும் தான் அர்த்தம் கொடுக்கப்படுகிறது. இறப்பு, பிறப்பு இந்த இரண்டுமே

**எப்படியும் வாழலாம் என எண்ணுவது அற்பத்தனம். இப்படித்தான் வாழவேண்டும் என எமக்கு நாமே வரையறைகளை விதித்துக் கொள்வது முட்டாள்தனம்.**





படிப்பகம்

www.padippakam.com



அர்த்தமில்லா தவை. அவற்றை அர்த்தப்படுத்துவதற்காகவே மனிதனுக்கு மட்டும் வாழ்க்கை என்கின்ற ஒன்று வழங்கப்படுகின்றது.

வாழ்க்கை என்பது உடல் சார்ந்ததல்ல, அது உணர்வு சார்ந்தது. உணர்ச்சி பூர்வ மானது. உலகுக்கும் எங்களுக்கும் இடையில் உணர்வு பூர்வமாகவும், உண்மையாகவும் உறவுப்பாலங்ளை அமைப்பதும் அதற்காகவே தொடர்ந்தும் நேர்மையான வழியில் உழைப்பதும் தான் உண்மையான வாழ்க்கையாகும். அத்தோடு அது ஒரு கலைத்துவமான அனுபவமும் ஆகும்.

ஒரு மனிதனின் வாழ்க்கை என்பது தனித்த ஒரு சம்பவமல்ல. அது பல்வேறு வகையான பல சம்பவங்களின் ஒட்டு மொத்தத்தொகுப்பாகும். அது போலவே ஒவ்வொரு தனிமனிதனும் தனிமனிதனுமல்லன். அவனது வாழ்க்கையென்பதும் அவனுக்கே உரிய தனிப்பட்ட விடயமும் அல்ல. ஒவ்வொரு தனி மனிதனும் சமூகத்தின் ஒரு அங்கம். இங்கு அவனது வாழ்க்கை என்பது பொது விடயம்.

**வெறுமனே உண்டு, உண்பதற்காக உழைத்து, உறங்கி இனம்பெருக்கி வாழ்வதும் சூழலின் தாக்கத்தால் தன் நிலையிழப்பதும் வாழ்க்கையல்ல. அதற்கு வேறு பெயர்**

**இளஞ்சித்தன், வவுனியா.**

www.padippakam.com

இதனால் சமூகம் அவனிடமிருந்து எதை எதிர்பார்கின்றதோ அதை நிறைவேற்றி முடிக்கவும் தன் சார்ந்த சமூகத்தின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கவும் அவன் கடமைப்பட்டவனாகின்றான். இது ஒவ்வொரு மனிதனும் இதயத்தில் தன் இறப்பு வரை எழுதிவைத்திருக்க வேண்டிய விடயம் மட்டுமல்ல தன்னுடைய வாழ்க்கைக் காலத்தில் தன் சமூகத்துக்காக தார்மீக ரீதியாக அவன் நிறைவேற்ற வேண்டிய வாழ்க்கை கடமையும் ஆகும்.

வெறுமனே உண்டு, உண்பதற்காக உழைத்து, உறங்கி இனம் பெருக்கி வாழ்வதும் சூழலின் தாக்கத்தால் தன் நிலையிழப்பதும் வாழ்க்கையல்ல. அதற்கு வேறு பெயர் ஐந்தறிவு படைத்த ஏனைய உயிரினங்களும் அதையே தான் செய்கின்றன. ஆறறிவு படைத்தவர்கள் என தம்மைத்தாமே மார்தட்டிக்கொள்ளும் மனிதனும் அதையே செய்வானாயின் அவன் மனிதன் என்று சொல்வதற்கே அருகதையற்றவன். ஐந்தறிவு படைத்த ஜீவன்களிலும் கீழானவன்.

எப்படியும் வாழ்ந்துவிட்டுப் போகலாம் என எண்ணுவது அற்பத்தனம். இப்படித்தான் வாழ்ந்தாக வேண்டுமென விதிக்கப்பட்ட வாழ்கையை ஏற்றுக்கொள்வதும் எமக்கு நாமே வரையறைகளை விதித்துக் கொள்வதும் முட்டாள்தனம். எப்படி வாழ்ந்தால் என் சார்ந்த சமூகமும் மனிதமும் நாமும் நன்மையடைவோமென அறிவியல் பூர்வமாகவும், உணர்வு பூர்வமாகவும் நாம் எண்ணுகிறோமோ அப்படி வாழ்வதே சரியானது அதுவே சிறந்தது.

மற்றவர்களோடு சேர்த்து அதில் ஒருவாராக எம்மை எப்போது சிந்திக்கத் தொடங்குகிறோமோ எமக்குள்ளிருக்கும் எம்மை எப்போது நாம் இனங்கண்டு கொள்கிறோமோ அப்போது தான் நாம் மனிதர்களாகிறோம். மற்றவர்களுக்காக ஏதாவது செய்யவேண்டுமென எப்போது நாம் முற்படுகிறோமோ அப்போது தான் நாம் வாழத் தொடங்குகிறோம். பிறருக்காக வாழ்பவன் பிறப்பையும் இறப்பையும் கடந்து விடுகிறான். இறந்த காலத்தையும் எதிர்காலத்

முகத்தில் உள்ள
முடிகளை அகற்ற,
முட்டையின் வெள்ளை கரு,
சர்க்கரை, சோளமா
அனைத்தையும் ஒன்றாகக்
கலந்து பசைபோல் ஆனதும்
முகத்தில் தடவவும்.
காய்ந்தவுடன் மெதுவாக
பிய்ந்து எடுத்தால்
முட்டையுடன் முடியும்
எளிதில் வரும்.



படிப்பகம்

தையும் வென்று முடித்தவனாகிறான். நிகழ்காலத்தில் இருந்து கொண்டே மூன்று காலங்களிலும் வாழ்பவன் வாழக்கூடியவன் என்ற பெருமையையும் வல்லமையையும் பெற்றுக்கொள்கின்றான்.


வாழ்க்கை என்பதே ஒரு கடமைதான். அதனை நிறைவேற்றத் தவறுபவன் மனித வர்க்கத்தையே களங்கப்படுத்தியவனாகின்றான். ஏன்? மனித சமுதாயத்துக்கே துரோகமிழைத்தவனுமாகின்றான். தனக்காக வாழ்ந்தவனையும், தனக்காக வாழ்பவனையும் வரலாறு ஒருபோதும் தன்னோடு வைத்துக் கொள்வதுமில்லை. மன்னிப்பதும் இல்லை. மாறாக பிறருக்காக வாழ்ந்தவர்களையும் பிறருக்காக வாழ்பவர்களையும் தன்னோடு வைத்துக்கொள்வதில் அது அதிகம் பெருமைப்பட்டுக் கொள்கிறது.

பலவற்றை எமக்கு கற்றுத்தரும் வாழ்க்கை சிலவற்றை மட்டுமே எமக்குப் பெற்றுத் தருகின்றது. கிடைப்பது சிறிதளவாயினும் நாம் வாழ்ந்தோம் என்பதற்கு நாளை அவைதான் சாட்சி சொல்லப் போகின்றன. ஒரு தத்துவாசிரியனாகவோ, ஒரு தியாகியாகவோ, ஒரு மாமேதையாகவோ எம்மால் வாழமுடியாது போனாலும் குறைந்தபட்சம் நாம் நாமாகவேனும் வாழ்ந்துவிட்டுப் போகவேண்டும். நாமே பிறரென்றும், பிறருக்காகவே நாமென்றும் பிறர் எம்மைப் பின்பற்றும் வகையில் வாழ்ந்து காட்ட வேண்டும். பின்னிற்கும் அனைவருக்கும் நாமே முன்னின்று வழிகாட்ட வேண்டும்.

வரலாறுகள் எமக்குப் பலவழிகளைக் காட்டிச் செல்கின்றன. எனினும் புதிய வரலாறுகளைப் படைப்பதும், புதிய அத்தியாயங்களைத் திறந்து வைப்பதும், ஒவ்வொரு தனிமனிதனுக்குமுள்ள வாழ்க்கைக் கடமையும் வரலாற்றுக் கடமையும் ஆகும். ■

## அன்பு

விண்வெளி, கணிதம், கணனி என உலகில் விண்முட்டும் வளர்ச்சிகள் எத்தனை சாதனைகள்! கொஞ்சம் திரும்புகின்றேன்! வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம், தெற்கில் வன்முறை, கிழக்கில் தினமொரு துப்பாக்கி சூடு, மேற்கில் கலவரங்கள் பழிவாங்கும் பெரு நெருப்



பில் பஸ்ம வளர்ச்சிகள் என்ன காரணம் '.. எதுதான் காரணம்? உள்ளத்தில் ஒட்டாமல் பேனா ஒற்றை வார்த்தையால் தாழ்ந்து நிற்கிறது!

இனியாவது பதிவு செய் உன் மூளையில் "அன்பு" என்னும் அற்புத வார்த்தையை.

**நாயகி**

www.padippakam.com

# "அ-ப்-பா"

சிறுகதை

**விவேக், வெள்ளவத்தை**



என் மனைவி கோகிலா எனது பத்து மாதக் குழந்தையுடன் கொஞ்சிப் பேசிக்கொண்டிருந்தாள். "அ-ப்-பா சொல்லு பார்ப்போம். அ-ப்-பா அ-ப்-பா!" என்று மிக அருமையாக குழந்தைக்கு கொஞ்சி கொஞ்சி முதல் வார்த்தையாக "அப்பா" எனக் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தாள். மனைவியின் பெருந்தன்மையை நினைத்து நினைத்து மகிழ்ந்து போனேன்.

நள்ளிரவு, நல்ல நித்திரை. திடீரென்று குழந்தையின் அழுகைச் சத்தம் "அ-ப்-பா! அ-ப்-பா" என்று அலற ஆரம்பித்தது. திரும்பிப்படுத்த என் கோகிலா, "என்னப்பா, குழந்தை உங்களைத்தான் கூப்பிடுது ஒருக்கா பாக்குங்க" என்றாள்.

அப்பா என்று சொல்லிக்கொடுத்த மர்மம் அப்போதுதான் எனக்கு புரிந்தது. ■



படிப்பகம்



நீங்கள் ஒரு நிறுவனத்தின் முதலாளி என்று உங்களை நினைத்துக்கொள்ளுங்கள். இரண்டு பணியாளர்களைக் கூப்பிட்டு சில பொறுப்புக்களை ஒப்படைக் கிறீர்கள். அவர்களும் பதில் சொல் கிறார்கள்.

முதல் பணியாளரின் பதில்:
நாளைக்கே செய்து விடுகிறேன் ஐயா.

இரண்டாம் பணியாளரின் பதில்: இன்றைக்கே முடித்து விடுகிறேன் ஐயா.

ஒரே ஒருவருக்கு மட்டும் பதவியுயர்வு தரவேண்டும் என்ற நிலை வரும்போது நீங்கள் அந்த வாய்ப்பை இந்த இருவரில் யாருக்குத் தருவீர்கள்?

இரண்டாமவருக்குத்தானே? அவருக்குத்தானே நல்ல நேரம்?

வெற்றிக்கான முதல் அடிப்படைக் காரணத்திற்கு மூன் றே மூன்று எழுத்து தான் அது இன்று.

# பின்னர் என்பதும் நாளை என்பதும்

# இல்லை என்பதற்கு சமன்

www.padippakam.com

ஜனநாயகம் என்பது உண்மையாய்க் கடைப்பிடிக்கப்படுவது நேர விஷயத்தில்தான். பணக்காரனோ ஏழையோ, அறிவு ஜீவியோ, மடையனோ யாருக்குமே ஒரு நாளைக்கு 24 மணி நேரம்தான்.

நேரத்திற்குள் முடிப்பது என்ற பழக்கத்தைச் சுலபமாகக் கைகொள்ளும் ஒரு வழி, சட்டைப் பையில் சிறு குறிப்பு எழுதும் கொப்பி ஒன்றை வைத்துக் கொள்வது. அன்றைக்குச் செய்ய வேண்டிய பணிகளை எழுதி எதெதை முதலில் செய்ய வேண்டும் என்று நம்பர் போட்டுக் கொள்ளுங்கள். வேலை முடிய முடிய அதை வெட்டிக் கொள்ளுங்கள். இரவு படுக்கப் போகும் போது அந்தப் பக்கம் வெற்றிடமாக இருக்க வேண்டும். காலையில் எழுந்ததும் பாருங்கள் - உங்கள் மணிபெர்ஸில் ஒரு மிகப்பெரிய பொக்கிஷம் இருக்கிறது : 24 மணி நேரம் என்ற புதையல்.

நேரம் ஒரு நல்ல சிநேகிதன். அதை வீணாக்கினால் தண்டனை கிடையாது. அதே போல எதிர்காலத்தைக் கடனாகவும் வாங்க முடியாது. இந்த நிமிடத்தை வீணாக்கி விட்டேன், அடுத்த நிமிடத்தையாவது பயனுடன் கழிக்க வேண்டும் என்று நீங்கள் முடிவெடுத்தால் போதும். அந்த அடுத்த நிமிடம் உங்களுக்காகக் காத்திருக்கும். ■

# கவிஞனின் சொத்து



"காலா, என் காலருகே வாடா, உன்னை என் காலால் மிதிப்பேன்" என்றான் பாரதி. நாம் யாரையாவது மிதிக்க வேண்டும் என்று நினைத்தால் போய்த்தான் மிதிப்போம். "நான் உன்னை மிதிக்கணும் பக்கத்திலே வாடா" என்று கூப்பிட மாட்டோம். ஆனால் உயிரைப் பறிக்க வருகிற காலனையே "டேய் காலா' என் காலருகே வாடா, நான் உன்னை மிதிக்க வேண்டும்" என்றான் பாரதி.

இந்த ஆண்மை, இந்த தன்னம்பிக்கை நான் தமிழ்க் கவிஞனுக்கே உள்ள பெரிய சொத்து. அதனால்தான் உயிரைப் பறிப்பதற்கு எருமை வாகனத்தில் வரும் காலன் தமிழ்க் கவிஞன் பாரதியின் உயிரைப் பறிக்க யானை மீது வந்தான். ■



படிப்பகம்

நீங்கள் இப்போ தாவது தயாரா?

இந்த வெற்றித் தத்துவத்தை உணர்த்தும் ஒரு பழமை வாய்ந்த சமஸ்கிருதப் பாடல்



## பார்! பார்! இன்றைய தினத்தையே பார்!

இன்றைய தினத்தையே, பார்!
ஏனென்றால், இது தான் வாழ்க்கை
வாழ்க்கையின் சாராம்சமான வாழ்வு
அதன் குறுகிய ஆயுளில் அனைத்தும் அடக்கம்!

உண்மையான வாழ்வு, அதன் பல தோற்றங்கள்,
வளர்ச்சி என்ற ஆனந்தம்,
செயலின் கம்பீரம்,
அதிகாரத்தின் மகத்துவம்,
எல்லாம் இன்றே.

ஏனென்றால் நேற்று என்பது கனவு
நாளை என்பதோ கற்பனையின் தோற்றம்!

ஆனால் இன்றைய நல்வாழ்வு
ஒவ்வொரு முன் தினத்தையும் ஆனந்தக் கனவாக்குகிறது,
நாளைய தினத்தைக் கண்முன் காட்டுகிறது.
அதனால் இன்றைய தினத்தையே பார்!
கவனத்துடன் உற்சாகத்துடன் திட்டமிட்டுப் பார்!

# படிப்பது எப்படி

**படிப்பது எப்படி**
**படிப்பது எப்படி**
**படிப்பது எப்படி**
**படிப்பது எப்படி**
**படிப்பது எப்படி**
**படிப்பது எப்படி**
**படிப்பது எப்படி**



நூல்களையோ பாடப்புத்தகங்களையோ, பத்திரிகைகளையோ, வேகமாகவும், மனதில் பதிய வைத்தும் கற்பதற்கும் பல்வேறு இலகு முறைகள் புதிய யுத்திகளுடன் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றில் இலகுவானதாகவும் உடனடியாக பலனளிக்க கூடியதாக இருப்பது வேகமாகப் படிக்கும் முறையும் (specially- reading) மனவரை படமுறை (mun specially teaching) யுமாகும்.

செயற்கை இரத்தம் கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. அமெரிக்காவில். பார்ப்பதற்கு இயற்கை இரத்தம் போலவே இருக்கும் ஆனால் ஏ. பி. ஓ என்று பிரிவுகள் கிடையாது. யாருக்கு வேண்டுமானாலும் இதனைச் செலுத்தலாம்.

## வேகமாக படிக்கும் முறை

வேகமாக படிக்கும் பயிற்சி முறைகள் இரண்டு உண்டு. முதலாவது விரல் வைத்து படிக்கும் முறையாகும். ஆள் காட்டி விரலை ஒவ்வொரு வார்த்தைக்கு கிழே வைத்து வரிவரியாகப் படிக்கவும். விரலை நகர்த்திக் கொண்டே படித்து வரவும். படிப் படியாக விரலை நகர்த்தும் வேகத்தை அதிகப்ப டுத்தவும். அந்த விரலின் வேகத் தின் அளவுக்கு படிக்கும் வேக மும் அதிகரிக்கும்.

ஆள்காட்டி விரலினால் ஒரு வார்த்தையைச் சுட்டிக்காட்டி படிப்பதால் மனதில் பதியும் தன்மை வெகுவாக அதிகரிக்கும். பாடங்களை ஞாபகத்தில் வைத்-திருந்து பரீட்சைகளின்போது வினாக்களுக்கு சரியாக விடை யளிக்கவும் இதன் மூலம் முடியும்.

அடுத்து, தலைகீழாகப்படிக்கும் முறையாகும்.(inueted method) புத்தகத்தை தலைகீழாகத் திருப்பி வைத்து கீலிருந்து மேலே படித்து வரவும். வலது புறத்திலிருந்து இடது புறமாக படிக்கவும். இப்படியாக அரைப்பக்கம் வரை படிக்கவும். பிறகு புத்தகத்தை நேராக வைத்து அந்தப் பகுதியை தலைகீழாகப் படித்தோமோ அதைப்படிக்கவும். அப்போது கண்கள் தாமாகவே வேகமாகப்-படிப்பதை உணருவோம்.

தலைகீழாக படிக்கும் போது முயற்சி செய்து கற்பதால் ஞாபக சக்தி அதிகரிக்கும். இடதுமுளை வலதுமுளை ஆகிய பகுதிகள் விழிப்படைந்து செயற்படுகின் றன. என முளையியல் ஆய்வா ளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.- இதேபோல் தலைகீழாய் ப டிக்கும் போது மன ஒருமைப்பாடு ஏற்




இருபத்தொன்றில்

செய்வாய் மனிதன்
செய்மதிக் கடவுள்
மரண விசாரணைக்குள் மனிதன்

உ.சி. உகரன்

பட்டு விடுகிறது. படிப்தில் ஏற்படும் ஆரம்பத் தடங்கலும் ஏற்பட இடமில்லை.

தலைகீழாக படிக்கும் போது முயற்சி செய்து படிப்பதால் மனம் படிப்பதற்குள் வந்துவிடுகிறது. தலைகீழாய்க் கற்கும் முறையால் இன்னொரு நன்மையும் உண்டு.

நீங்கள் தலைகீழாய் சிரமப் பட்டு படித்த பின் நேராய் வைத்து படிக்கும் போது கண்கள் உங்களை அறியாமலேயே வேகமாகப் படிக்கத்தொடங்கும். வேகமாகக் கற்பதனால் அதிகமான பாடங்கள் விடயங்களைக் குறைவான நேரத்தில் படித்து மனதில் பதிய கவனத்தில் கொள்ளுங்கள்.

நுண்மை பருமை என்றொரு வழக்கு உண்டு. நுண்மை தனது உண்மையைத் தனித்து உணர்த்தும் பண்புடையதல்ல. அது தனது உண்மையை பருமை வழியே வெளிப்படுத்தும் இயல்புடையது. உதாரணமாக அழகு நுண்மை தன்மையானது. இது ஒருவர் வாயிலாகவே தனது இருப்பை தெரிவிக்கும். இவ்வாறு அறிவு, அன்பு, அறம், நீதி முதலிய நுண்மைகள் ஒவ்வொரு பருமை மூலம் தன்தன இருப்பை புலப்படுத்தும் நுண்மை பருமை என்பன உயிர் உடல் போன்றன.

## மன வரைப்படமுறை

இம்முறையைக் கையாள முதலில் பாடத்தில் அல்லது விடயத்தில் ஒருஅத்தியாயத்தை முழுமையாக படிக்கவும். அதன் பின்னர் ஒரு வெள்ளைத்தாளை எடுத்து அதன் மையத்தில் ஒரு வட்டம் போட்டு அதற்குள் அந்த அத்தியாயத்தின் தலைப்பை எழுதிக் கொள்ளவும்.

வட்டத்திலிருந்து கோடு போட்டு சுற்றிலும் தனித்தனி சதுர வடிவக் கட்டங்கள் வரைந்து அதற்குள் அந்த அத்தியாயத்தின் உட்பிரிவுத் தலைப்புகளை எழுதவும். வட்டத்திலிருந்து சதுர கட்டங்களை உருவாக்கியதுப் போல் சதுர கட்டங்களிலிருந்து கோடு போட்டு முக்கோணங்களை வரைந்து அதற்குள் உட்தலைப்பில் வரும் பிரிவுகளை, வகைகளை, முக்கிய செய்திகளை, குறிப்புகளை, சூத்திரங்களை, எழுதவும். முக்கோணக்கட்டத்


உடலிலிருந்து எடுக்கப்படும் ஒரு யூனிட் இரத்தம் என்பது 350 மில்லி லீட்டராகும். அது மொத்த எடையில் மிகக்குறைவு.

www.padippakam.com

# வேகமாக வாசித்து இலகுவாக விளங்கி ஆழமாக மனதில் பதிய வைக்க சில வழிகள்

தில் எழுதிய செய்திகளுக்கு கிளைச் செய்திகள் குறிப்புக்கள் இருந்தால் அதிலிருந்து கோடு போட்டு புதிய வடிவில் கட்டமைத்து எழுதலாம். அனைத்தையும் அழகாய் வரைந்து எழுதி ஒரு கலையம்சமமாக வைத்திருப்பதும் மனதில் இலகுவில் தெளிவாய் பதிய வழிக்காட்டும் பெரும்பாலும் ஒரு பாடத்தில் 10முதல் 15 அத்தியாயங்கள் இருப்பதால் ஒரு அத்தியாயத்திற்கு ஒரு மணிவரை பாடத்தாள் மூலம் ஒரு பாடத்திற்கு 10 முதல் 15 தாளில் அனைத்து விடயங்களையும் கொண்டுவந்து விடலாம்.

## மன வரைப்பட முறை:




ஒரு வரைப்படத்தாளை ஒரு அட்டையில் ஒட்டி தொங்க வைத்து விட்டால் அடிக்கடி கண்ணில் பட்டு அது மனதில் நன்கு பதியும்.

ஒருவர் தனக்குப்பிடித்த முறையில் தனது ஆக்கத்திறன், நுண்ணறிவை பயன்படுத்தி பல வித்தியாசமான மன வரை படங்களை அமைத்துக் கொள்ளலாம். நினைவாற்றலை வளர்ப்பதற்கு ஒரு சிறந்த முறையாகும். ■

www.padippakam.com

# குழந்தைகளை கவனமாக பாருங்கள்.

குழந்தைகளுக்கு வாயில் புண் வருவதற்கு பல காரணங்கள் உண்டு. விற்றமின் "சி" குறைவு ஒரு முக்கிய காரணம். சிறுவர்களுக்கு உளவியல் சார்ந்த காரணங் களினாலும் வாய்ப்புண் உண்டாகலாம். பெற்றோர் அடிக்கடி தனிமையில் விட்டுச் செல்வது, பரீட்சையின் போது ஏற்படும் பயம் காரணமாகவும் ஏற்படலாம்.

அகத்தின் அழகு முகத்தில் தெரிவதுபோல வயிற்றில் ஏதாவது பிரச்சனை இருந்தால் அதுவும் வாய்ப்புண் மூலம் வெளிப்படும்.

மன உளைச்சல் காரணமாக வாய்ப்புண் தோன்றவில்லை என்றால் "மவுத் வாஷால்" வாயைக் கொப்பளிக்க வைக்க வேண்டும். புண் விரைவில் ஆறிவிடும்.

வாயிலிருந்து துர்நாற்றமும் வீசினால் அது உணவு சமிபாடு அடையாததைக் குறிக்கும். சொத்தைப் பல் இருந்தாலும் ஈறுகள் கெட்டிருந்தாலும் வாயிலிருந்து துர்நாற்றம் வீசும். சாப்பிட்ட பின்னர் இது அதிகமாக இருக்கும்.

குழந்தையின் நுரையீரலில் கட்டியிருந்தாலும், வயிற்றில் நாக்குப் பூச்சியிருந்தாலும் வாய் துர்நாற்றம் வீசும்.

நாக்கின் மேல் வெண்மையாக மா போல ஒரு படலம் படர்ந்திருக்கும். இது ஒரு வகையான காளான் காரணமாக ஏற்படுகிறது. பற்களை நன்கு துலக்க வைத்து மருந்தும் எடுத்தால் சரியாகி விடும்.

அதிக அளவில் தண்ணீர் குடிக்க கொடுக்க வேண்டும். வாயையும் அடிக்கடி கொப்பளிக்க வேண்டும். முக்கிய மான ஒன்று இரவில் படுக்கச் செல்ல முன்னர் பல்துலக்கும் பழக்கத்தை சிறுவயதிலேயே குழந்தை களுக்கு ஏற்படுத்தி விடவேண்டும். ■



படிப்பகம்




# இலங்கை விகடன் சந்தா படிவம்

"இலங்கை விகடன"வாரசெய்தி பத்திரிகை உங்கள் கரம் சேர்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். எனவே இலங்கை விகடன் சந்தாதாரராகுங்கள்.

ILLANKAI VIKADAN

பெயர் :......................................................

விலாசம் :......................................................

......................................................

தொலைபேசி இல. :......................................................

பத்திரிகை விநியோக முகவரி :......................................................

......................................................

சந்தா காலம் (புள்ளடி இடுக.)

52 வெளியீடுகள் ☐ 26 வெளியீடுகள் ☐

**சந்தா கட்டண விபரம்** (தபால் செலவு உட்பட இலங்கை ரூபாய்களில்)

52 வெளியீடுகள் - ரூபா 1400/-
26 வெளியீடுகள் - ரூபா 750/-

காசோலை ☐ காசுக்கட்டளை ☐

.................................... ..................2005/06
ஒப்பம் திகதி

இப்படிவத்தை பூர்த்திசெய்து **REPORTERS PUBLICATION LTD.** என்ற பெயருக்கு வரையப்பட்டு குறுக்குகோடிடப்பட்ட காசோலையுடன் அல்லது வத்தளை தபால் அலுவலகத்தில் மாற்றிக்கொள்ளக் கூடியதாக பெற்றக் கொண்ட காசுக்கட்டளையுடன் **ILLANKAI VIKADAN** 160, THELANKAPATHA ROAD, WATTALA, SRILANKA. முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

www.padippakam.com

# "இடைவெளியை நிரப்பும் செயற்பாடுகளில் இறங்காமல் இருக்கிறோம்?"



படிப்பகம்

www.padippakam.com

பத்திரிகையாளர் அமரர் த. சிவராமுக்கு வழங்கப்பட்ட "மாமனிதர்" கௌரவ விருதினால் விருது சிறப்புப் பெறுகிறது. தமிழர் இறைமையுடன் கலந்து அதுமேலும் மேன்மையடைகிறது.

சிங்கள பேரினவாதிகளின் இயக்கமையவிசைக்குள் இருந்து கொண்டே உயிர், உடமை அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தமது அறிவுப்புலமையினால் தமிழ் தேசியத்திற்காக போராடினார். எனவே கொழும்பில் இருந்து கொண்டே தமிழ் தேசியத்தின் இறைமைக்காக வெற்றிக்காக போராடிய இருவருக்கு "மாமனிதர்" கௌரவம் கிடைக்கப் பெற்றுள்ளது. முதலாமவர் மாமனிதர் குமார் பொன்னம்பலம், இரண்டாமவர் மாமனிதர் த. சிவராம்.

துப்பாக்கிகள் ஓய்ந்திருக்கும் இக்காலகட்டத்தில் ஊடகப் போர் இடம்பெறுகிறது என்றும் இதனை, எதிர்கொள்ள "ஊடக போராளிகள்" களமிறங்கவேண்டும். புதிய பத்திரிகையாளர்கள் இத்துறைக்குள் வரவேண்டியதன் அல்லது உருவாக்கப்படவேண்டியதன் முக்கியத்தை வெவுவாக வலியுறுத்தினார்.சமாதான காலப்பகுதியை இவர் "தகவல் போர்காலம்" என்ற வார்த்தையை பொருத்தமாக பயன்படுத்தி வந்துள்ளார்.

சிங்கள பேரினவாதிகளின் ஏமாற்று தந்திரங்கள், ஏகாதிபத்திய வாதிகளின் சூறையாடும் திட்டங்கள்- உண்மைகளை தமிழ் மக்களை சென்றடைந்து தக்க உணர்வை ஏற்படுத்தவல்லனவாக பத்திரிகையாளர் சிவராமின் எழுத்துக்கள் காணப்பட்டன. சிவராம் எப்பொழுதும் சிந்தையால் சிந்தித்து உணர்வால் எழுதியிருந்தார். அவருடைய எழுத்துக்களில் "தமிழர் தேசியம்" உணர்வூட்டப்பட்டிருக்கும் தமிழர் போராட்டம், தமிழ் தேசியம் போன்ற "இறைமை"களின் உறுதிப்பாடு ஆண்டாண்டு



www.padippakam.com

காலம் நிலைத்திருக்க வேண்டும் என்பதும் பத்திரிகையாளர் சிவராமின் அவாவாக அவரை இயக்கி இருந்தது. இதனை நிலைநாட்ட ஊடகவியலாளர்களினால் மட்டும் தான் முடியும் என நம்பி செயற்பட்டார். ஆனால் தன்சமூகம் சார்ந்த ஊடகத்துறையில் பல குறைப்பாடுகள் காணப்படுவதற்கு காரணம் தமிழ் சமூகத்தின் மனநிலையே என்றும் அவரிடம் ஏக்கப் பெருமூச்சு ஒன்று எப்பொழுதும் வெளிப்பட்டுக்கொண்டே இருந்தது.

பணத்தை தேடுவதற்கான கல்வியல் பயன்பாட்டை கொண்ட ஒரு சமூகமாக தமிழ் சமூகம் இருப் பதால் சிங்கள பேரினவாதத்திற்கு எதிரான ஒரு ஊடகப் போரை மேற்கொள்வதற்கு தமிழர் தரப்பில் பலம் போதாமல் இருக்கிறது. ஊடக முதலீட்டில் செல்வந்தர் அக்கறை செலுத்த வேண்டும் என்று விரும்பினார். ஆனால் சாபக்கேடாக இந்த ஆர்வம் தமிழ் செல்வந்தர்களிடம் இல்லை. இந்த சிந்தனைச் சீரழிவன் தாக்கம் சிவராமுக்குள் கடைசிவரை பெரிய ஆதங்க வடுக்களாக இருந்தன.

தான் பல பத்திரிகைகள் ஆரம்பித்து ஊக்குவிப்புகள் கிடைக்காமையினால் இடைநிறுத்திய வரலாறுகளை பத்திரிகையாளர் சிவராம் அடிக்கடி கூறுவார்.

இலங்கை தமிழ் பத்திரிகைத் துறையின் வளர்ச்சிக்காக தமிழ் மக்கள்- தமிழ் சிந்தனையாளர்களின் ஒத்துழைப்பு சிங்கள சமூகத்துடன் ஒப்பீட்டு ரீதியில் நோக்கும் போது நிலமை கவலைக்கிடமாகவே உள்ளது. உதாரணமாக தமிழர்களில் 40 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் "ஓசிப் பேப்பர்" படிப்பதில் திருப்தியடைகிறார்கள். சிங்களவர் மத்தியில் அப்படியல்ல ஒவ்வொருவரும் பத்திரிகையை பணம் கொடுத்து வாங்கி படிப்பதையே கௌரவமாக கருதுகிறார்கள்.

# சக்தியை ஒரு சக்தியிடமிருந்து மறித்தெடுக்கும் அடக்குமுறை கொள்கை

தமிழ் சமூகத்தின் மீதான அவருடைய பார்வை - கணிப்பு ஆதகங்கள் யாவும் இலங்கையில் சிங்கள இனவாதிகள் தமிழ் சமூகத்தை அழித்துவிடக் கூடாது. அதற்காக என்னால் ஆன கடமையை செய்ய வேண்டும் என்பதாகவே இருந்தது. 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத



படிப்பகம்

www.padippakam.com



காலப்பகுதியில் ஐ.பி.சி. வானொலிச் சேவைக்கு பத்திரிகையாளர். த. சிவராம் வழங்கிய பேட்டி ஒன்றை இங்கு பிரசுரம் செய்வது அவரது பார்வை - கணிப்புகள் மேலும் வலுப்பெற உதவும்.

"இன்றைய கால கட்டத்தில் தமிழர்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய விடயம், தகவல் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது தகவல் போரினுடைய காலம்; இதை நாம் மறந்து வெங்காயங்களாக இருந்து கொண்டிருக்க முடியாது.

தகவல் யுகத்தில் நாங்கள் தகவல் தொழில் நுட்பங்களை செம்மையாகக் கற்க வேண்டியிருக்கிறது. அந்த வகையில் கற்றவர்கள் எங்கள் மத்தியில் இல்லை. இது தான் எங்களுக்கு இருக்கக் கூடிய அடுத்த கட்டப் பலவீனமாக இருக்கும். இந்த தகவல் யுகத்தின் பரிணாமங்களை முக்கியமாக உணர்ந்து கொள்ளக் கூடிய திறமையானவர்கள், அதை அரசியல் கோணத்தில் கொண்டு வரக் கூடியவர்கள் தமிழ் சமூகத்தில் இல்லை. டாக்டர்களாகவும், பொறியியலாளர்களாகவும் பணத்தை மட்டும் நாட்டம் கொண்ட கல்வியில் பற்றுள்ள ஒரு சமூகம் என்பதால் தமிழர்களுக்கு இத்தகைய நாட்டம் இல்லாமல் இருப்பது எங்களுக்கு பெரும் பலவீனமாக இருக்கிறது. ஆகவே நடேசனை மண்டையில போட்டு விட்டால் அல்லது ஒரு சிவராமைப் போட்டு விட்டால் தகவல் என்ற விடயம் அப்படியே இருட்டடிப்பு செய்யப் பட்டு ஊடகவியலாளர்கள் பயந்து ஓடிவிடுவார்கள் என்ற நோக்கத்தில் தான் ஒரு முன்முயற்சி எடுக்கப்பட்டு வருவதாக நான் நினைக்கிறேன்.

> **"அறிவை அறிவிற்காக நாடுகின்ற தன்மை தமிழ் சமூகத்தில் குறைவாக இருப்பதும், அறிவை அறிவிற்காக கற்பவர்களை மதிக்காமல் இருப்பதும் பஜரோவில் போகின்ற அறிவாளியை மதிப்பதும். பஸ்ஸில் செல்கின்ற அறிவாளியை மதிக்காமல் இருப்பதும் போன்ற சில தன்மைகள் இருப்பதை உணர்ந்து இந்த இடைவெளியை நிரப்புகின்ற செய்பாடுகளில் நாங்கள் இறங்காமல் இருக்கின்றோம்."**

அமெரிக்கத் தலையீடுகள் எங்களுடைய தமிழ் மண்ணில் ஏதோ

www.padippakam.com

ஒரு வகையில் நடப்பதற்கான முன்னேற்பாடுகள் நடந்து வருகின்றன. அதில் நாங்கள் நெருப்பு கோழிகள் போல் மண்ணிற்குள் தலையை விட்டுக்கொண்டு அதைக் காணாமல் இருக்க முடியாது. நான் அண்மையில் ஐரோப்பிய யூனியன் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தேன். கூட்டத்திற்கு அடுத்த நாள் ஒரு வெளிநாட்டு அமைச்சுக்கு சென்று அங்குள்ள ஆசியா சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சந்தித்து பேசிய போது அவர்களும் இலங்கையில் அமெரிக்கா எடுத்துவரும் அதீத அக்கறை பற்றி கவலை கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

ஆனால் அதற்காக ஐரோப்பிய யூனியன் எங்களுடைய போராட்டத்தை ஆதரித்து எங்களுக்கு மகுடம் சூடிவிடும் என்ற குர்திஷ் போராளிகள் போல், கொலம்பியாவில் இருந்த போராளிகள் போல் நம்பி மோசம் போய்விடக் கூடாது. ஏரித்திரிய போராளிகள் போல் எரித்திரிய போராட்டத்தில் நடந்தது போல் எமது சொந்தக்காலில் நிற்பதற்கான அடித்தளத்தை தான் நாங்கள் இன்று முக்கியமாக போட வேண்டும். அதில் மிக முக்கியமான விடயம் எங்களுடைய ஊடக அடித்தளத்தை மிகவும் வழிப்படுத்த வேண்டியுள்ளது. அதற்கான வாய்ப்புகள் எங்கள் மத்தியில் மிக அரிதாகக் காணப்படுவதுதான் வேதனையாக உள்ளது.

ஆனால், முக்கியமாக ஒரு ஊடக இடைவெளியை அதாவது அங்கு நடப்பவற்றை குழப்பமாக வெளியிடக்கூடிய கும்பலை ஒரு புறம் உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. இந்த சக்திகள் இன்னொருபுறம்

**"தகவல் யுகத்தில் நாங்கள் தகவல் தொழில் நுட்பங்களை செம்மையாகக் கற்க வேண்டியிருக்கிறது. அந்த வகையில் கற்றவர்கள் எங்கள் மத்தியில் இல்லை. இது தான் எங்களுக்கு இருக்கக் கூடிய அடுத்த கட்டப் பலவீனமாக இருக்கும். இந்த தகவல் யுகத்தின் பரிணாமங்களை முக்கியமாக உணர்ந்து கொள்ளக்கூடிய திறமையானவர்கள், அதை அரசியல் கோணத்தில் கொண்டுவரக் கூடியவர்கள் தமிழ் சமூகத்தில் இல்லை. டாக்டர்களாகவும், பொறியியலாளர்களாகவும் பணத்தை மட்டும் நாட்டம் கொண்ட கல்வியில் பற்றுள்ள ஒரு சமூகம் என்பதால் தமிழர்களுக்கு இத்தகைய நாட்டம் இல்லாமல் இருப்பது எங்களுக்கு பெரும் பலவீனமாக இருக்கிறது"**



படிப்பகம்

www.padippakam.com

உண்மையை வெளிக்கொண்டு வரக்கூடிய வழிகளை அடைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனுடைய ஒரு அம்சந்தான் நடேசனுடைய கொலை. அதனுடைய தொடர் வெளிப்பாடுதான் பொதுவான அச்சத்தை வெளிப்படுத்துவதற்காக இப்போது மட்டக்களப்பில் நடந்து வரும் மர்மக் கொலைகள். இவற்றினூடாக மக்கள் தகவல்களை வெளியிடாமல் பயத்துடனும் அச்சத்துடனும் மட்டக்களப்பில் இருக்க வேண்டும். அப்படி அவர்கள் பயந்து அஞ்சி வாழ்ந்தால் மட்டக்களப்பை அழித்து அதை தமது கைக்குள் வைத்துக் கொண்டு தாங்கள் அடைய நினைக்கின்ற குறிக்கோள்களை அடையமுனைவதற்கான முயற்சிகள் நடக்கின்றன. இதை நாங்கள் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

கிழக்கில் பத்திரிகையாளர்கள் துணிந்து செயற்படுவதற்கு ஆவன செய்யப்பட வேண்டும். புலிகளும் தமது கருத்துக்களை மக்களுக்கு முன் வைக்கக்கூடிய தெளிவான இணையத்தளம் மற்றும் ஏனைய வசதிகளை ஏற்படுத்த வேண்டும். ஒரு ஆட்லறியை வாங்குகின்ற அளவு முதலீடு நிச்சயமாக ஊடகத்தில் போடப்பட வேண்டும். ஆனால் ஊடக முதலீடு அதை நோக்கிய ஈடுபாடு எந்தளவுக்கு இருக்கின்றது என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அங்கு பத்திரிகையாளர்கள் துணிந்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை.

ஐரோப்பிய நகரமொன்றில் எனது நண்பர் ஒருவருடன் பேசினேன். எவ்வாறு அயர்லாந்தி



**"....ஆக்வே நடேசனை மண்டையில போட்டு விட்டால் அல்லது ஒரு சிவராமைப் போட்டு விட்டால் தகவல் என்ற விடயம் அப்படியே இருட்டடிப்பு செய்யப்பட்டு ஊடகவியலாளர்கள் பயந்து ஓடிவிடுவார்கள் என்ற நோக்கத்தில் தான் ஒரு முன்முயற்சி எடுக்கப்பட்டு வருவதாக நான் நினைக்கிறேன்."**



படிப்பகம்

www.padippakam.com

# கோயிலில் தேங்காய் உடைப்பதன் பலன்

கோயில் அர்ச்சனை செய்யும் போதும் மற்றும் பண்டிகை அல்லது விசேஷ தினசகளில் நடைபெறும் பூசையின் போதும் நாம் தேங்காய் உடைக்கிறோம். அதற்கான பலன்களையும் பெரியவர்கள் கூறுகின்றனர்.


## ஓவியர் தேவை

இலங்கை விகடன் பத்திரிகையில் கடமையாற்றுவதற்கு ஓவியர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் எதிர்பார்க்கும் சம்பளத்தை குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

**ILLANKAI VIKADAN**
REPORTERS PUBLICATION LTD.
160, THELANkA PATHA ROAD,
WATTALA, SRI LANKA.
E-MAIL: REPORTERS PUBLICATION @ YAHOO.COM.


தேங்காய் சரி பாதியாக உடைந்தால் குடும்பத்தில் சச்சரவு நீங்கி நன்மைகள் உண்டாகும்.

தேங்காய் குடுமி பக்கம் பெரியதாகவும், அடிப்பக்கம் சிறியதாகவும் உடைத்தால் வீட்டில் லட்சுமி காடட்சம் உண்டாகும்.

சிறுதுண்டு தேங்காய் தானாக மூடிக்குள் விழுந்திருந்தால் செல்வம் சேரும்.

தேங்காய் மூடியின் உள்ளே நரம்பு பிடித்திருத்தால் குடும்பத்தினருக்கு நீண்ட ஆயுள் உண்டாகும்.

தேங்காய் மூடி முழுவதுமாய் பூ நிறைந்திருந்தால் மிகவும் நன்று. எந்த காரியத்தை வேண்டி வழிபடுகிறோமோ அது இறையருளால் நிறைவேறும். மங்களமும் உண்டாகும்.

தேங்காய் நீளவாக்கில் குறுக்காய் உடைந்தால் நன்மை உண்டாகாது.

தேங்காய் உடைத்தால் அழுகியிருப்பது அபசகுணம். அதை அங்கேயே போட்டுவிட்டு வேறு தேங்காய் உடைத்து பூஜையை நிறைவு செய்யவும். மன சஞ்சலம் தேவையில்லை.

தேங்காய் மூடியைப் பிறருக்குக் கொடுக்கும்போது கண்கள் உள்ள பாகத்தை நாம் நிறுத்திக் கொண்டு அடுத்த பாதியைத் தருவதே நன்மை உண்டாகும்.

www.padippakam.com

னுடைய உண்மைப் பிரச்சினையை மூடிமறைத்து பிரச்சினையைத் திசை திருப்புவதற்கு ஏகாதிபத்திய ஊடகங்கள் தொடர்ந்து செயற்பட்டன என்பதை விளக்கினேன். அவருக்கு உண்மையில் அயர்லாந்துப் பிரச்சினை குறித்து தெரியாது. பிரித்தானியாவில் வாழ்கின்ற போதும் அயர்லாந்து பிரச்சினை குறித்து அவருக்கு பூரணமாகத் தெரியவில்லை. வடஅயர்லாந்தில் பெரும்பான்மையாக புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். இதனால் இருவருக்குமிடையே பிரச்சினை என்றே அவர் நினைத்தார். அயர்லாந்துப் பிரச்சினையை பிரித்தானியா எவ்வாறு பிரித்து ஆழ்கிறது. வடஅயர்லாந்தில் பிரித்தானியாவின் படைத் தளங்கள் இருக்கின்றன என்பதைப் பற்றிய உண்மைகள் மறைக்கப்பட்டு விட்டிருந்தன என்பது தான் இதற்கு முக்கிய காரணம்.

ஏகாதிபத்திய ஊடகங்கள் வெற்றிகரமாக அந்த போராட்டத்தின் அடித்தளத்தையே வீழ்த்தி விட்டன. உண்மையான அடித்தளம் என்னவென்பதை அங்குள்ளவர்களுக்கே தெரியாத வகையில் குழப்பத்தை விதைத்துவிட்டன.

அதேபோல் பலஸ்தீனப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் பலஸ்தீனிய சிறந்த ஊடகவியலாளர்கள் என்று சொல்லக்கூடியவர்களையெல்லாம் அழித்து விட்டார்கள்.

ஆபிரிக்காவை எடுத்துக் கொண்டால் அணுகுண்டை உற்பத்தியாக்குவதற்கு தேவையான பெருமளவு யுரேனியத்தைக் கொண்டுள்ள நாடு கொங்கோ. அத்துடன் கைத்தொலைபேசிகளுக்கான மூலப்பொருளை உருவாக்குகின்ற நாடும் கொங்கோ தான். ஆனால் அங்கே நடக்கின்ற சம்பவங்கள் லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்படும் உண்மைகளை வெளிக்கொண்டு வருவதற்கான புத்திஜீவிகள் அனைவரும் கொன்றொழிக்கப்பட்டு விட்டார்கள். அங்கே கொலையும் கொள்ளையும் நடக்கின்றன. உண்மை என்னவென்றே தெரியாமல் போகின்றது.

இது ஏகாதிபத்தியங்களின் மிக சாதாரணமான நடைமுறை. எங்கே தமது ஆதிக்கத்தை நிலை நாட்ட வேண்டுமோ, எங்கே கொள்ளையடிக்க வேண்டுமோ அங்கே உண்மையை வெளிக்கொண்டு வரும் புத்திஜீவிகளையும், ஊடகவியலாளர்களையும் அழித்தொழிப்பது ஏகாதிபத்திய அடக்குமுறை நாடுகள் கையாளுகின்ற சாதாரணமான விடயம். சக்தியை ஒரு சக்தியிடமிருந்து பறித்தெடுப்பதன் மூலமாகத்தான் அடக்கு முறைக் கொள்கையை ஏகாதிபத்தியங்கள் நிலை நாட்டிக் கொள்கின்றன.


தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers of Tamil Eelam

சிவராமிற்கு வழங்கப்பட்ட "மாமனிதர்" விருதுப்பத்திரம்

படிப்பகம்

www.padippakam.com




# மலர் அஞ்சலி

இதை உணர்கின்ற தன்மை எந்தளவுக்கு தமிழ் சமூகத்திற்கு இருக்கிறதென்பது கேள்விக்குறி. அறிவை அறிவிற்காக நாடுகின்ற தன்மை தமிழ் சமூகத்தில் குறைவாக இருப்பதும், அறிவை அறிவிற்காக கற்பவர்களை மதிக்காமல் இருப்பதும் பஜிரோவில் போகின்ற அறிவாளியை மதிப்பதும். பஸ்ஸில் செல்கின்ற அறிவாளியை மதிக்காமல் இருப்பதும் போன்ற சில தன்மைகள் இருப்பதை உணர்ந்து இந்த இடை வெளியை நிரப்புகின்ற செய்பாடுகளில் நாங்கள் இறங்காமல் இருக்கின்றோம்." பத்திரிகையாளர் சிவராம் தமிழர் வரலாறு உள்ளவரை வாழும் "மாமனிதர்". ■




படிப்பகம்

www.padippakam.com

# புகைப்படப் பிடிப்பாளர்களே !

இந்த பகுதி உங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
உங்கள் கமெரா கண்களுக்குள் சிக்கி உங்களை
ஆச்சரியப்பட வைத்த "அந்த" ஒரு படத்தை
கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.




160, THELANKA PATHA ROAD, WATTALA, SRI LANKA.

படிப்பகம்

ILLANKAI VIKADAN Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/56/News/20
www.padippakam.com


# Manufacturer of Steel & Copper Wire Rods

## MELWIRE INDUSTRIES (PVT) LTD.

**Factory:**
145/2, Negombo Road,
Liyanagemulla, Seeduwa,
Sri Lanka.
Tel: 4832435

**Office:**
30-2/7, Abdul Jabbar
Mawatha, Colombo-12,
Sri Lanka.
Tel: 2458342, 4718434
Fax: 5340826


படிப்பகம்